Saturday மெயில்
01 - 46
14-08-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=
සැටඩේ මේල්
A Fasc ... in

பொதுசன நூலகம்
நாவாந்துறை படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# உலகை மிரட்டும் இந்திய பக்ரீறியா





பக்ரீறியாவை விட்டு பக்ரீறியாவுக்குத் தாவி புதிய வகையான பக்ரீறியாவை உருவாக்கும் 'ஜீன்' இந்தியா, ஐரோப்பா, அமெரிக்கா, கனடா மற்றும் பாகிஸ்தான், வங்கதேசம் உள்ளிட்ட தெற்காசிய நாடுகளில் பரவிவருகிறது. இந்த 'ஜீன்' இந்தியாவிலிருந்து பரவியுள்ளதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

New Delhi metallo-beta-lactamase-1 அல்லது NDM-1 என்று அழைக்கப்படும் இந்த 'ஜீன்' மூலமாக சுரக்கும் 'என்ஸைம்கள்' புதிய வகையான பக்ரீறியாக்களை உருவாக்கி வருகிறது. வழக்கமான பக்ரீறியா எதிர்ப்பு மருந்துகளால் இதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

குறைந்த செலவு என்பதால் இந்தியாவுக்குச் சென்று மருத்துவ சிகிச்சைகள் பெற்றுத் திரும்பியவர்கள் மூலம் இந்த ஜீன் பரவியுள்ளதாக இங்கிலாந்து ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

அமெரிக்காவில் இந்த பக்ரீறியாவால் தாக்கப்பட்ட 3 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2ஆம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper at G.P.O.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலகை...**

(முன்பக்கத் தொடர்ச்சி)

வழக்கமாக பக்ரீரியாக்கள் எதற்கு அடங்காவிட்டாலும் மிகச் சக்தி லாய்ந்த மருந்தான Carbapenems ரக எதிர்ப்பு மருந்துகளுக்குக் கட்டுப் பட்டுவிடும். ஆனால், இந்த புதிய ஜீன் கொண்ட பக்ரீரியாக்களை இந்த மருந்து கூட அழிக்க முடிய வில்லை என்பது தான் அதிர்ச்சியைப் பரப்பியுள்ளது.

இதன் மூலம் இந்த பக்ரீரியாவை அழிக்க மருந்தே இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது. இதனால் இந்த பக்ரீரியா விரைவிலேயே உலகம் முழுவதும் மிக வேகமாகப் பரவும் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்தியாவிலிருந்து தான் இந்த பக்ரீரியா பரவியுள்ளதாகக் கூறப்பட்டு அதற்கு டில்லியின் பெயரும் வைக்கப்பட்டுவிட்டதால் நாட்டின் 'சூப்பர் ஸ்பெஷாலிற்றி' மருத்துவமனைக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்று தெரிகிறது. இங்கு மருத்துவ சிகிச்சைகளுக்கான செலவு மிகவும் குறைவு என்பதால் பல்வேறு நாடுகளில் இருந்து ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான மக்கள் இந்திய மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த பக்ரீரியா முடக்கப்பட்டு பயம் போகும் வரை இந்தப் பயணிகளின் எண்ணிக்கை பெருமளவு சரியும் என்று தெரிகிறது.

சென்னை மற்றும் ஹரியானாவில் சிகிச்சை பெற்று பிரிட்டனுக்குத் திரும்பியவர்களிடமிருந்து பெறப்பட்ட இரத்த மாதிரிகளை சோதித்தபோது அதில் பலருக்கு NDM-1 பக்ரீரியா தாக்குதல் இருப்பது தெரியலந்துள்ளதாக ஒரு பிரிட்டன் மருத்துவக் குழு தெரிவித்துள்ளது.

1940 களில் பென்சிலின் கண்டுபிடிக்கப்பட்டபோது அது அனைத்து பக்ரீரியாக்களையும் அழித்துக் காட்டியது. ஆனால் ஆண்டுகள் செல்லச் செல்ல பென்சிலினைத் தாக்குப் பிடிக்கும் பக்ரீரியாக்கள் உருவாகிவிட்டன. இதையடுத்து அடுத்தடுத்து அதிக சக்தி வாய்ந்த ஆன்டி பயாடிக் மருந்துகளை விஞ்ஞானிகள் உருவாக்கிக் கொண்டே உள்ளனர். ஆனால் அலை கட்டுப்பாடே இல்லாமல் மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதால் தான் இப்போது அதையெல்லாம் கூட எதிர்த்து நிற்கும் புதிய பக்ரீரியா உருவாகக் காரணமாகிவிட்டதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

இப்போது இந்த நவீன பக்ரீரியாக்களை colistin என்ற மருந்தைக் கொண்டு அடக்கலாம் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஆனால், இந்த மருந்தால் ஏற்படும் பக்க விளைவுகள் மிக அதிகம் என்பது குறிப்பிடத் தக்கது. இதனால் இந்த மருந்தை மிக மிக நோயுற்றவர்களுக்கே பயன்படுத்தலாம் என்கிறார்கள்.

## 'கடவுள் என்னைக் காப்பாற்றுவார்'



ஒரு வயோதிபர் தனது மாடி வீட்டின் முகப்பு மண்டபத்தில் அமர்ந்திருந்தவாறு மழை பெய்வதைப் பார்த்துக் கொண்டு இருந்தார்.

மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்ததால் வீட்டுக்குள் வெள்ளம் புக ஆரம்பித்தது. அப்போது வீட்டின் முன்னால் ஒரு படகில் சில பேர் வந்தார்கள். 'மேலும் வெள்ளம் வருமுன்னர் எங்களுடன் படகில் ஏறுங்கள்' என்று அவர்கள் வயோதிபரைக் கேட்டார்கள்.

'நான் உங்களுடன் வரமாட்டேன். என்னைக் கடவுள் காப்பாற்றுவார்' என்று வயோதிபர் கூறினார்.

வெள்ளம் மேலும் உயர்ந்தது, வயோதிபர் முதலாம் மாடிக்குச் சென்று பல்கணியில் இருந்தவாறு மழையைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

முதலாம் மாடிக்கும் வெள்ளம் உயர்ந்துவிட்டது. அப்போதும் அங்கே ஒரு படகில் சிலர் வந்து 'எங்களுடன் படகில் ஏறுங்கள் வேறு இடத்துக்குப் போய் வெள்ளத்தில் மூழ்காமல் உயிர் தப்புவோம்' என்று வயோதிபரைக் கேட்டனர்.

அதற்கும் அவர் 'என்னைக் கடவுள் காப்பாற்றுவார். நான் உங்களுடன் வரமாட்டேன்' என்று கூறி மறுத்துவிட்டார்.

ஒரு மணித்தியாலம் கழித்து வெள்ளம் கூரையளவுக்கு உயர்ந்து விட்டது. வயோதிபர் கூரைமேல் ஏறி நின்றபோது அங்கும் ஒருபடகில் சிலர் வந்தனர். தங்களுடன் படகில் ஏறி வருமாறு அவர்கள் கேட்டதற்கும் வயோதிபர் மறுத்துவிட்டார். தன்னைக் கடவுள் காப்பாற்றுவார் என்றே இவர்களுக்கும் அவர் கூறினார்.

சில நிமிடங்களில் கூரையின் மேலாகவும் வெள்ளம் வந்து வயோதிபர் மூழ்கி மரணமடைந்தார். உடனடியாகவே அவர் சொர்க்கத்துக்குப் போனார். அங்கே கடவுளைக் கண்டு 'ஏன் நீங்கள் என்னைக் காப்பாற்றவில்லை' என்று கேட்டார்.

'கிழட்டு முட்டாளே, மழை பெய்யத் தொடங்கியதும் அடுத்தடுத்து மூன்று படகுகளில் ஆட்களை அனுப்பியது நான்தானே' என்று கடவுளிடமிருந்து பதில் வந்தது.

## 5 நிமிடங்கள் பிந்தி ஓடும் கைக்கடிகாரம்



மூன்றுபேர் கைக்கடிகாரங்களுடன் மலையில் ஏறி உச்சியில் நின்றார்கள்.

முதலாவது நபர் தனது கைக்கடிகாரத்தை மலையுச்சியில் இருந்து கீழே எறிந்தார். அது உடைந்து நொறுங்கிவிட்டது.

இரண்டாவது நபரும் தனது கைக்கடிகாரத்தைக் கீழே வீசினார். இதுவும் நொறுங்கிப் போனது.

மூன்றாவது நபரும் அவ்வாறு கைக்கடிகாரத்தைக் கீழே வீசினார். ஆனால், அவர் அதை வீசிய உடனே மலையின் உச்சியில் இருந்து கீழே இறங்கி அதை நிலத்தில் விழவிடாமல் பிடித்துவிட்டார்.

மற்றைய இருவருக்கும் பெரும் ஆச்சரியமாகப் போய்விட்டது.

'எப்படி உமது கைக்கடிகாரத்தை மட்டும் கீழே இறங்கி உங்களால் பிடிக்க முடிந்தது' என்று அந்த நபரிடம் அவர்கள் கேட்டனர்.

வந்தது பதில்;


'எனது கைக்கடிகாரம் 5 நிமிடங்கள் பிந்தி ஓடுகிறது.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபவம் புதுமை இவரிடம் கேட்டோம்

# 'எம்.பி.யாக இருப்பதைவிட அதிபராக இருக்கவே விருப்பம்'

பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகி வந்ததை விட தான் ஏற்கனவே செய்த அதிபர் தொழிலே சிறந்ததென தோன்றுவதாக யாழ். மாவட்டத்தில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக பாராளுமன்றம் தெரிவாகியுள்ள புதிய எம்.பி.எஸ். ஸ்ரீதரன் தெரிவித்தார்.



Saturday மெயிலுக்கு வழங்கிய பேட்டியிலேயே ஸ்ரீதரன் இந்தக் கருத்தை வெளியிட்டார். அவரது பேட்டியின் விபரம் வருமாறு;

**கேள்வி:உங்களது கல்வி,குடும்ப பின்னணி பற்றி?**

**பதில்:** கிளிநொச்சி வட்டக்கச்சி கிராமத்தில் தான் நான் பிறந்தது வளர்ந்தது எல்லாம். கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி இந்துக்கல்லூரி, அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை, இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை ஆகியவற்றில் எனது பாடசாலைக் கல்வியை மேற்கொண்டேன். பின்னர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டமும் கல்வி முதுமானி இரண்டாம் நிலைப்பட்டமும் பெற்றேன். 1990 ஆம் ஆண்டு ஆசிரியர் சேவையில் எனக்கு நியமனம் கிடைத்ததுடன் 2002 ஆம் ஆண்டில் அதிபராக நியமனம் பெற்றேன். இறுதியாக கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றினேன். திருமணமாகி எனக்கு 5 பிள்ளைகள் இருக்கின்றன. மனைவி ஆசிரியையாக இருக்கிறார்.

**கேள்வி:உங்களது அரசியல் பிரவேசத்துக்கான காரணம்?**

**பதில்:** கிளிநொச்சி மக்களுக்கு அரசியல் தலைமைத்துவம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதே எனது அரசியல் பிரவேசத்துக்கான காரணம்.அங்கு 30 வருட அரசியல் இடைவெளி ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் அம் மக்களுக்கு தலைமைத்துவம் வேண்டுமென்பதற்கு புத்திஜீவிகள் உட்பட பலரது வேண்டுகோளுக்கிணங்கவே அரசியலுக்கு வரவேண்டி ஏற்பட்டது.

**கேள்வி: அரசியலில் உங்களது இலக்கு?**

**பதில்:** தமிழ் மக்கள் நிரந்தரமாக நிம்மதியாக பூர்வீக குடிகளாக இந்த மண்ணில் தேசிய உரிமையுடன் சுதந்திரமாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டும். அதற்கு இலங்கையிலும் சரி, சர்வதேச மட்டத்திலும் சரி அரசியல் ஜனநாயக ரீதியாக என்னால் முடிந்தளவு குரல் கொடுத்து போராடுவதே அரசியலில் எனது இலக்கு.

**கேள்வி:பாராளுமன்றத்தில் முதல் நாள் அமர்வு அனுபவம் எப்படி இருந்தது?**

**பதில்:** நான் ஏற்கனவே பாடசாலை மாணவர்களுடன் பாராளுமன்றம் வந்து சென்ற அனுபவம் இருக்கிறது. எனினும் இந்த சபைக்குள் பிரவேசித்ததும் இந்த சபையானது நியாயபூர்வமான மக்களின் உரிமைகளை பெற்றுத் தருமா என்ற கேள்விக் குறியே எழுந்து நிற்கிறது.இதைவிட அதிபர் தொழிலே சிறந்தது என எனக்கு தோன்றுகிறது. இலங்கையின் உயரிய சபை பாராளுமன்றம் தான். மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியதும் இதில் தான். ஆனால், இங்கோ சபைக்கு தகாத வார்த்தைகள் பிரயோகிக்கப்படுகின்றன. ஆளுந்தரப்பு எது செய்தாலும் அதை எதிரணி எதிர்ப்பதும் எதிரணி உறுப்பினர்கள் உரையாற்றும் போது ஆளுந்தரப்பினர் இடையூறு விளைவிப்பதும் வழக்கமாகவுள்ளது.அதுமட்டுமல்லாது சிறுபான்மையின பிரதிநிதிகள் பேசும் போது பெரும்பாலானோர் சபையில் இருப்பதில்லை. அப்படி சபைக்குள் இருந்தாலுமே பேச்சை செவிமடுப்பதுமில்லை. தமிழ் எம்.பி.க்கள் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுக்கு எழுதும் கடிதங்களுக்குக்கூட பதில் வருவதில்லை. எனவே, எம்.பி.களுக்கே இந்த நிலைமை என்றால் சாதாரண மக்களின் நிலைமை எப்படி இருக்கும்.

**கேள்வி:புதிய எம்.பி.களுக்கிடையேயான உறவுகள் எப்படியிருக்கின்றன?**

**பதில்:** சிலருடன் பரவாயில்லை.பலருடன் இன்னும் உறவுகள் ஏற்படவில்லை. கால ஓட்டத்தில் ஆக்கபூர்வமான நட்புறவுகளை ஏற்படுத்திக் கொண்டு தமிழ் மக்களின் நிலைமைகளையும் அவர்களது உண்மையான பிரச்சினைகளையும் ஏனைய எம்.பி.களுக்கு தெளிவுபடுத்தி ஒருமைப்பாடொன்றை ஏற்படுத்த வேண்டுமென்பதே எனது எதிர்பார்ப்பு.

**கேள்வி: அரசியல் தவிர்ந்த வேறு ஏதாவது துறைகளில் ஆர்வம் இருக்கிறதா?**

**பதில்:** சட்டத்துறையில் பயில வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது. 1988 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்தில் இடம்கிடைத்த போதும் அப்போது நிலவிய இயல்பு நிலையற்ற சூழ்நிலை காரணமாக என்னால் இணைந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. எனவே, சட்டத்துறையில் பயில வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது. அது மட்டுமல்லாது யுத்தத்தில் பெற்றோரை இழந்த பிள்ளைகள், அங்கவீனமுற்றோர், உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டோர் போன்றவர்களுக்கு வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதற்கான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. ஏனெனில் 1985 ஆம் ஆண்டு தொடக்கம் 1988 ஆம் ஆண்டு வரை நான் அநாதை இல்லத்தில் இருந்தவன் என்ற வகையில் குருகுலம் போன்ற சிறுவர் இல்லங்கள் மற்றும் பிள்ளைகளை இழந்த பெற்றோருக்கான இல்லங்களை ஏற்படுத்தி உதவ வேண்டுமென்ற எண்ணம் நீண்ட காலமாகவே இருக்கிறது.அரசியல் ஊடாக இவற்றை நிறைவேற்றுவது பற்றி நான் சிந்திக்கிறேன்.

**கேள்வி: தமிழ் மக்களுக்கான உங்களது செய்தி?**

**பதில்:** கடந்த காலங்களில் தமிழ் சமூகம் என்பது சோரம் போய் காட்டிக் கொடுப்புகளில் ஈடுபட்டதாகவே இருக்கிறது. எனவே,இனிவரும் காலங்களில் சோரம் போகாத காட்டிக் கொடுப்புகளில் ஈடுபடாத துரோகமிழைக்காத உறுதியானதும் நம்பிக்கை மிக்கதுமான சமூகமாக தமிழ் மக்கள் இலங்கையில் இருக்க வேண்டும்.இஸ்ரேலிய யூதர்கள் போல் அமெரிக்கர்கள், பிரித்தானியர்கள் போல் நாட்டுப் பற்றாளர்களாக இருக்கவேண்டும்.உறுதியாக இருந்து உரிமைகளுக்காகவும் விடிவுக்காகவும் ஜனநாயக வழியில் போராட வேண்டும்.

டிட்டோ குகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் எங்கே...?



தம்பிக்கு 8 வயது. அண்ணனுக்கு 10 வயது. இருவருமே மிதமிஞ்சிய குழப்படிகாரர்கள். அவர்களது கிராமத்தில் சிறுவர்கள் ஏதாவது விசமத்தனமான காரியங்களைச் செய்திருந்தால், அவற்றில் இவர்கள் இருவருக்கும் முக்கிய தொடர்பு இருக்கும் என்பது பெற்றோருக்கு நன்கு தெரியும்.

அந்தக் கிராமத்தில் ஒரு மதகுரு சிறுவர்கள் மத்தியில் ஒழுங்குக் கட்டுப்பாட்டை வளர்க்கக் கூடிய பயனுடைய போதனைகளைச் செய்துவருவதாகத் தாயார் கேள்விப்பட்டார். தனது மகன்மாரை ஒவ்வொருவராக அந்த மதகுருவிடம் அனுப்பி அவர்களிடத்தில் நல்லொழுக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற முடிவுக்கு வந்த தாயார் மதகுருவிடம் சென்று அனுமதி கேட்டார். மதகுருவும் இணங்கிக் கொண்டார்.

தாயார் முதலில் 8 வயது மகனை மதகுருவிடம் அனுப்பி வைத்தார். தனது அறையில் சிறுவனை அமர வைத்த மதகுரு மிகவும் கண்டிப்பான குரலில் 'கடவுள் எங்கே இருக்கிறார்' என்று கேட்டார்.

பையன் அதிர்ச்சியடைந்தவனாக வாயை அகலத்திறந்தான். ஆனால், எதுவுமே பேசவில்லை. மதகுரு மேலும் கூடிய கண்டிப்பான குரலில் 'கடவுள் எங்கே இருக்கிறார்' என்று மீண்டும் அதட்டியபடி கேட்டார்.

அதற்கும் பையனிடம் இருந்து பதில் வரவில்லை. வாயை அகலத்திறந்தவன் மூடவேயில்லை.

மீண்டும் மதகுரு முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக் கொண்டு கர்ச்சிக்கும் குரலில் 'கடவுள் எங்கே இருக்கிறார்' என்று மூன்றாவது தடவையாக அறையே அதிரும் வண்ணம் கேட்டார்.

பெரும் பீதியடைந்த பையன் அறையின் கதவை அடித்துத் திறந்து கொண்டு வீட்டை நோக்கி ஓடினான். ஓடிக் களைத்து மூச்சு வாங்கிக் கொண்டு நின்ற பையனிடம் சகோதரன் 'என்ன நடந்தது மதகுருவின் இடத்தில்' என்று கேட்டான்.

பையன் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு அண்ணனிடம் சொன்னான், 'பெரிய பிரச்சினை எங்களுக்கு வந்துவிட்டது. கடவுளைக் காணவில்லை. அவரைத் தொலைத்ததும் நாங்கள் இருவரும்தான் என்று அந்த மதகுரு சந்தேகிக்கிறார்?'

# மூன்று கணவர்மார்

தங்களது மனைவிமாரை பிரவசத்துக்காக மருத்துவமனையில் அனுமதித்துவிட்டு மூன்று கணவர்மார் வெளியே ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தார்கள்.



அங்கு ஓடிவந்த தாதியொருவர் ஒரு கணவரைப் பார்த்து 'வாழ்த்துக்கள், உங்கள் மனைவிக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கின்றன' என்று கூறினாள்.

அதற்கு அவர் 'நல்லது நான் வேலை செய்வது மின்னிசோட்டா ருவின்ஸ் நிறுவனத்தில்' என்றார்.

சில நிமிடங்கள் கழித்து இன்னொரு தாதி அங்கே ஓடிவந்து இன்னொரு கணவரைப் பார்த்து 'வாழ்த்துக்கள், நீங்கள் தந்தையாகி விட்டீர்கள். உங்கள் மனைவி மூன்று ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்திருக்கிறார்' என்று கூறினாள். அதற்கு அவர், 'அடடா, நல்ல பொருத்தம். நான் திறீ எம் நிறுவனத்தில் அல்லவா வேலை பார்க்கிறேன்' என்றார்.

இதைக் கேள்விப்பட்டதும் பக்கத்தில் நின்ற மூன்றாவது கணவர் ஐயோ, ஐயோ என்று அலறியபடி சித்துப்பிரமைக்குள்ளானவர் போன்று ஓடினார்.

அதைப்பார்த்த தாதி 'இவருக்கு என்ன நடந்தது? ஏன் இப்படி அச்சமடைந்து ஓடுகிறார்' என்று மற்றைய இருவரையும் கேட்டாள்.

அவர்களிடமிருந்து வந்த பதில், அவர் செவிண் அப் நிறுவனத்தில் அல்லவா வேலைபார்க்கிறார்.

# ஒரு மூதாட்டியின் நான்கு திருமணங்கள்



**80** வயதான மூதாட்டி நான்காவது தடவையாகத் திருமணம் செய்வதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்.

அவரது முன்னைய மூன்று திருமணங்கள் குறித்தும் பேட்டி காண்பதற்கு பத்திரிகை நிருபர் ஒருவர் மூதாட்டியின் வீட்டுக்கு வந்தார்.

பேட்டியின் போது மூதாட்டி கூறியதாவது;

எனக்கு இருபது வயதாக இருந்தபோது வங்கியாளர் ஒருவரைத் திருமணம் செய்தேன். நாற்பது வயதானபோது சேர்க்கஸ் நடத்துபவர் ஒருவரைத் திருமணம் செய்தேன். பின்னர் சில வருடங்கள் கழித்து மதபோதகர் ஒருவரைத் திருமணம் செய்தேன். இப்போது மரணச் சடங்குகளை நடத்தும் மலர்ச்சாலை உரிமையாளர் ஒருவரைத் திருமணம் செய்யப்போகிறேன். முதல் திருமணத்தை பணத்துக்காகச் செய்தேன். இரண்டாவது திருமணத்தை களியாட்டத்துக்காகச் செய்தேன். மூன்றாவது திருமணத்தை வாழ்வின் இறுதிக் காலகட்டத்துக்காகச் செய்தேன். இப்போது வாழ்வை முடித்துக் கொள்வதற்காக நான்காவது திருமணத்தைச் செய்கிறேன்.

# மின்சாரத்தைக் கண்டுபிடித்த பெண்



பென் பிராங்ஸின் தனது காற்றாடி பரிசோதனை மூலம் மின்சாரத்தைக் கண்டுபிடித்ததாக பலர் நம்புகிறார்கள்.

ஆனால், அவரல்ல உண்மையில் ஒரு பெண்மணிதான் மின்சாரத்தைக் கண்டுபிடித்தாள்.

எப்படியென்று யோசிக்கிறீர்களா?

உண்மையென்னவென்றால், பென் பிராங்ஸின் ஒருநாள் மனைவியுடன் படுக்கையில் இருந்தபோது அவளின் பக்கமாகத் திரும்பி காதுக்குள் ஏதோ குசுகுசுத்தார்.

அதற்கு அவள் 'போய் காற்றாடி பறக்கவிடுங்கள்' என்று சொன்னார். மிகுதி சரித்திரம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மாணவரை சிதறடிக்கும் களியாட்டங்கள்

இவ்வருடமும் ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்ப கல்வி ஆண்டாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ள போதிலும் மாணவர்கள் சுதந்திரமாகக் கல்வி கற்க முடியாத சூழ்நிலைகளும் ஏற்பட்டுள்ளன.

மாணவர்களின் எதிர்கா லத்தையே தீர்மானிக்கும் பரீட்சைகள் ஆரம்பமாகியுள்ள இவ்வேளையில் பல பகுதிக ளிலும் இசைக் கச்சேரிகளும் களியாட்டங்களும் நடைபெற்று வருவதனால் பாடங்களை மீட் டிப் பார்ப்பதில் மாணவர்கள் சோம்பலாகவுள்ளனர் என பெற்றோர் கவலை தெரிவிக் கின்றனர்.

குறிப்பாக யுத்தத்தால் மிக வும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதி யாழ்ப்பாணம் என்பதால் அவர்களது மனநிலையை மாற் றுவதற்காக கடந்த வருடத்திலி ருந்து தொடர்ந்து இசைக்கச்சே ரிகள் நடைபெற்றுக்கொண்டி ருக்கின்றன.

உயர்தரப் பரீட்சை நடைபெ றுகின்ற இக்காலப்பகுதியிலும் கூட யாழ்ப்பாணத்தின் பல பகு திகளிலும் இசை நிகழ்வுகள்,வி ளையாட்டுப் போட்டிகள் நடை பெற்றுக் கொண்டிருப்பதனால் பிள்ளைகள் பரீட்சை நேரங்களில் பாடங்களை மீட்டிப்பார்ப்பதில் ஆர்வம் காட்டுவதில்லையென பெற்றோர் கவலை தெரிவிக்கின் றனர்.

இம்முறை உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவனொருவரின் தாய் இது தொடர்பாகக் கூறு கையில்; 'கடந்த வாரம் முதல் யாழ்ப்பாணத்தின் கோப்பாய் பகு தியிலுள்ள கோல்ஸ்டார் மைதா னத்திலும் கந்தசுவாமி கோவில் மண்டபத்திலும்[உற்சவமல்லாத நாட்களில்]இசைக் கச்சேரிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதால் எனது மகன் பாடங்களை மீட்டிப்பார்ப்பதில் ஆர்வம் குறைந்துள்ளதுடன் தனது தேவை எதிர்பார்ப்புகளை இசையின் பக்கம் செலுத்துகின் றான்.

குடாநாட்டிலுள்ள பிரபல தமிழ்ப்பாடசாலையிலேயே எனது மகன் கற்கின்றான்.முன்னர் பாடசாலையிலும் கூட தனியார் வகுப்புகளிலும் நன்கு படிப்பான். ஒவ்வொரு தவணைப் பரீட் சையிலும் முதலாமிடத்தையே பெறுவான்.அவ்வாறே சாதார ணத்தர பரீட்சையிலும் சிறந்த பெறுபேற்றை பெற்றான்.அதே



போன்று உயர்தரத்தில் விஞ்ஞா னப்பிரிவில் கற்றுக்கொண்டான். எனது மகனை எதிர்காலத்தில் வைத்தியராக ஆக்க வேண்டு மென்பதே எனது ஆசை.இருந் தும் இவ்வாறான தேவையற்ற இசைநிகழ்வுகள் அதிகரித்துள்ள மையினால் இவனின் திசை அடிக்கடி மாறுபடுகிறது.

9 ஆம் திகதி உயிரியல் பாடத் தின் முதலாம் பகுதிப் பரீட்சை நடைபெற்றது.ஆனால் அதற்கு முன்னைய நாள் ஞாயிற்றுக்கி ழமை பிரமாண்டமான மேலைத் தேய இசைக் கச்சேரிகள் இடம் பெற்றதால் பாடத்தை சிறிதள வேனும் மீட்டிப்பார்க்கவில்லை. இந்நிகழ்வினை பார்க்கச் சென்றுவிட்டான்.அவ்விடத் திற்கு நானும் சென்று பார்த்தால் பெரும்பாலான உயர்தர வகுப்பு மாணவர்கள் உட்பட பாடசாலை மாணவர்களே நிரம்பியிருந்தனர்.

எனவே மாணவ சமுதாயத்தின் நலன்கருதி எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் இந்தப் பரீட்சைக் காலத்திலாவது இசைநிகழ்வுகள்,விளையாட்டுப் போட்டிகளை தடை செய்ய சம் பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்" அந் தத் தாய் கூறினார்.

பாடசாலை மாணவர்களை சீரழிக்கும் சினிமா,தொலைக் காட்சி,கச்சேரிகள் என்பவற்றை ஒதுக்கிவிட அரசாங்கம் இன்று எவ்வகையான நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளது என்பதையும் மாணவர்கள் சிந்திக்க வேண்டும்.வெறுமனே கல்வியாண்டாக மாத்திரம் பிரக டனப்படுத்திவிட்டு மாணவர்க ளின் கல்வியில் விளையாடும் ஒவ்வொரு அதிகாரிகளிடமும் தங்களுக்கான வாய்ப்புகளை தட்டிக்கேட்க இச்ச முதாயம் தயங்கக் கூடாது.

பெரும்பாலான மாணவர்கள் காதல்,செல்போன்,மது ஆகிய வைகளால் சீரழிந்து வருகின்ற னர்.உலகை நினைப்பதை விட பெற்றோரை நினைத்து அவர்க ளுக்கு நாம் என்ன செய்யப்போ கிறோம் என்பதனை உணர்ந்து மாணவர்கள் படிக்க வேண்டும்.

உயர்தரப்பரீட்சை எழுதும் மாணவனொருவன் கூறுகை யில்;

நான் கணிதப் பிரிவில் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறேன்.பா டசாலைக் காலங்களில் இசைக் கச்சேரிகள் நடைபெற்றாலும் என்னால் ஓரளவு சமாளித்துக் கொள்ள முடிந்தது.ஆனால் பரீட்சை நேரங்களில் இவ்வா றான இசைக்கச்சேரிகளின் சத்தங்களினால் வீட்டிலிருந்து படிக்க முடியாத நிலை ஏற்பட் டுள்ளது.

அத்தோடு அயலிலுள்ளவர்கள் அனைவரும் இதனைப் பார்க்கச் செல்லும் போது என்னால் மனதை ஒரு நிலைப்படுத்திக் கொண்டு படிக்க முடியாதுள்ளது. எனது மனமும் இந்நிகழ்ச்சிக ளின் பக்கமே செல்கிறது.

யுத்தம் நடைபெற்ற காலப்ப குதியில் கூட பல்வேறு அழிவு கள்,இழப்புகள் ஏற்பட்டிருந்தும் எம்மைப் போன்று கல்வி கற்கின்றவர்களிற்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை.

யுத்தத்தினால் பாதிக்கப்பட் டவர்களின் மனநிலையை மாற்றியமைக்க வேண்டும் என் பதற்காக அரசாங்கத்தினால் நடத்தப்படுகின்ற இசைக்கச் சேரிகள்ள பரீட்சைக்காலத்தில் மட்டுமாவது நடத்தாமலிருக்க நடவடிக்கை எடுப்பார்களா யின் என்னைப்போன்ற மாணவர்களுக்கு இலகுவாக இருக்கும்" எனவும் அம்மாண வன் கூறினார்.

எனவே இங்குள்ள மாண வர்களின் நலன்கருதி பரீட்சைக் காலங்களில் மாத்திரமாவது இசைக்கச்சேரிகள் உட்பட இதர நிகழ்வுகளை ஒத்திவைப்பதன் மூலம் யாழ்ப்பாணத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்குச் செல் லும் மாணவர்களின் எண்ணிக் கையை அதிகரிக்க முடியும்.

எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயிற்று வலியுடன் தாமதிக்கும் ஒவ்வோர் கணமும்...



வயிற்று வலியானது பலவிதமான காரணங்களிற்கு... அதாவது எதற்கென்றில்லாது உணரப்படலாம். பாடசாலை செல்ல மறுக்கும் சிறுவன் கூட வயிற்று வலியை உணரலாம். ஆனாலும் வலியின் உக்கிரம் எப்படியெல்லாம் வர்ணிக்கப்படுகின்றது. கத்தியால் குத்துவது போன்று, இல்லை முறுக்குவது போல் இவ்வாறு பலவிதமாய் அதுமட்டுமல்ல வயிற்றுவலியில் உழல்பவரின் செயற்பாடும் கட்டிலில் கிடந்து உருள்வது தொடக்கம். சுருண்டு படுத்து அழுவது வரை விசித்திரமானவை தான். எனினும் சில நிலைகளில் உயிராபத்து என்பது தாமதிக்கும் கணந்தோறும் வலிச் சேர்க்கப்படுவதுண்டு.

வயிற்றுவலி அதன், அமைவு, தொடர்ச்சித்தன்மை மேலும் துணையான அறிகுறிகள்... இவற்றுடன் வயது, பால் என்பனவும் செல்வாக்கு செலுத்துகின்றன. உதாரணமாக... சிறுவர்களில் குடல் உள்முகமாக மடிப்படைதல் நிகழ்கின்றது. இது போலவே வயது வந்தவர்களில் குடல் சுழற்சி முறுக்கத்திற்கு உட்படுகிறத.

இது இவ்வாறிருக்க பெண்களில் இனப்பெருக்க வயதுடையவர்களில் கருவானது கருப்பை தவிர்ந்ததாக சூலகக்காணின் பகுதிகளில் உட்பதிக்கப்படுகின்றது. இங்கு கருவானது வளர்ச்சியுறும் போது இச்சூலகங்கள் வெடிக்கும் போது குருதிப் பெருக்கு ஏற்படுகின்றது. இது மிகவும் கவனத்துக்குரியதொரு விடயமாகும். இவற்றைவிட குடல் வளரியில் ஏற்படும் சிதைவு இன்னும் குடல், இரைப்பை போன்ற பகுதிகளில் ஏற்படும் துளைகள். அதாவது குடற்புண் (Ulcer) இனால் ஏற்படும் புண்களின் ஆழமான ஊடுருவில் இவ்வாறு அமைகின்றது.


இவ்வாறான பாரதூரமான ஆபத்துக்குரிய் நிலைகள் இனம்காணப்படத் தவறும் பட்சத்திலும் இனம் காணத் தாமதிக்கும் பட்சத்திலும் விபரீதமான விளைவுகளே ஊருவாகின்றன.

இவற்றில் குடல், இரப்பை, குடல்வளரி, சூலகக் காண் இவற்றில் ஏற்படும் துளை... இவற்றினூடாக குருதியிழப்பு என்பது ஆபத்தை அதிகரிக்கச் செய்யும் ஒரு செயற்பாடாகவே உள்ளது.

இவற்றை விட சதையின் நீர்க் கட்டிகள் வெடித்தல், குடல்வளரி, இரப்பையில் குடலில் துளை ஏற்படும்போது அவற்றினுள் காணப்படும் உயிர் இரசாயனப் பொருட்களும் நொதியங்கள், சிலவற்றில் கிருமிகளும் உடற் குழியில் விடப்பட்டு தொற்றுக்கு உட்படுத்தப்படுகின்றது.

இவ்வாறான நிகழ்வுகளில் பெரும்பாலும் வயிற்றறை திறக்கப்பட்டு அல்லது துளையிடப்பட்டு கருவிகள் உட்செலுத்தப்படும் குருதிப் பெருக்கு மற்றும் குறைபாடுகள் சீர்செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது.

இவ்வாறான நிகழ்வுகளின்போது ஏற்படும் குருதியிழப்பு ஈடுசெய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது. இவ்வேளைகளில் குருதியிழப்பை ஈடுசெய்வதற்கு சேலைன் தொடக்கம் குருதி மாற்றீடு வரை தேவைப்படலாம். இங்கு மிகவும் அவசரமான சிகிச்சை பெற வேண்டிய நிலையில் உள்ள நோயாளி வீட்டிலிருந்து வைத்தியசாலைக்கு அணுகும் வரையுள்ள கால அளவில் கூட குருதியிழப்பினால் பாதிப்புறலாம். இவ்வேளையிலும் நீராகாரம் என்பது பெரிதும் ஏற்புடையதாக அமையாது போகலாம். அதாவது உணவுக்கூறுகள் காணப்படின் அவை வெடிப்பின் துளைகளின் ஊடாக உடற்பகுதியில் சென்று நோய் நிலையை மோசமடையச் செய்யலாம். இருப்பினும் நீர் ஓரளவு ஏற்புடையது ஏன்று கருதலாம். எனினும் சிகிச்சைக்கு விரைய வேண்டிய தேவையே இங்கு முக்கியம் பெறுகின்றது.




இங்கு விரைவான வைத்தியசாலை அனுமதி,துரிதப்படுத்தப்பட்ட நோய் நிர்ணயம் இதனுடன் குருதியிழப்பிற்கான மாற்று நடவடிக்கை இவையே நோயாளியின் சிகிச்சை வெற்றியைத் தீர்மானிக்கும்.

இவ்வாறான பாரதூரமான நிலையை எய்தும் நோயாளியை இனங்காண வேண்டிய தேவை குடும்பத்தினருக்கும் உரிய தொன்றாகும். இவற்றின்போது வயிறு உப்பியதாகத் தென்படல்,வயிறு இறுக்கமாகக் காணப்படல், வயிற்றில் தொட்டு அழுத்தும் போது மிகையான அளவு வலியை உணர்தல் இவற்றுடன் வாந்தி,மலங்கழித்தல்,பாதிப்புறல்,வாயு வெளியேறாத நிலை. மேலும் மலம் கறுப்பான நிறத்தில் வெளியேறல்,இரத்த வாந்தி இவ்வாறு நீண்டு செல்லினும் வயிற்றில் தொட்டு அழுத்த முடியாத வலி காணப்படுவது மிக முக்கியமான தொன்றாகும். இவ்வாறு வயிற்றுவலி முக்கியம் பெறும் ஒரு விடயமாக அமையும் வேளையில் மருத்துவர்களை நாட வேண்டிய தேவை கண்டிப்பாகவே அமைகின்றது.

எனினும் வியாபார ரீதியாக அமைந்த மருத்துவமனைகளில் சாதாரண வயிற்றுவலிகள் கூட வியாபார ரீதியில் கழியொலி நுண்ணொலியினூடாக (scan) சோதிக்கப்பட்டு பணம் கறக்கப்படுவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இங்கு உரிய நிபுணத்துவம் இல்லாது.சிலசமயம் மேற்கொள்ளப்படும் சோதனைகளால் (Scan) இவ்வாறான பாரதூரமான ஆபத்து இனங்காணத் தவறப்பட்டு உயிரிழப்பு ஏற்படுகின்றதும் வழமையாகிவிட்டன.

டாக்டர்
வெ.நாகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

140810-1.indd 6
Process Cyan Process Magenta Process Yellow



# பிரான்ஸில் 40 ஆயிரம் மாணவிகள் விபசாரத்தில்

பிரான்ஸில் நாற்பதாயிரம் மாணவிகள் கல்லூரிக் கட்டணம் கட்டுவதற்காக விபசாரத்தில் ஈடுபடுகிறார்கள்.பிரான்ஸில் அதிகரித்து வரும் கல்விக் கட்டணத்தை கட்ட முடியாமல் இரண்டு லட்சம் மாணவர்கள் திண்டாடுகிறார்கள், ஒரு ஆய்வின் படி 45,000 மாணவர்கள் வறுமையில் வாடுகிறார்கள். இந்த திடுக்கிடும் செய்தி பிரபல பிரெஞ்சு தினசரியில் வெளியாகியுள்ளது.

பல்கலைக்கழக மாணவிகள் படிப்புச் செலவுகளுக்காக விபசாரம் செய்வது செல்வந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அதிகரித்து வருகின்றது.

பிரிட்டனில் செய்யப்பட்ட ஆய்வு ஒன்றின் படி,விபசாரத்தில் ஈடுபடும் மாணவிகளின் எண்ணிக்கை கடந்த ஆறு ஆண்டுகளில் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கின்றது. கடந்த ஆறு ஆண்டுகளில் தான் அரசு கல்விக்கட்டணத்தை அதிகரித்திருந்தது. அது அங்கே தற்போது வருடத்திற்கு 3000 பவுண்ஸ்களாகவுள்ளது.

பிரிட்டிஷ் கல்லூரிகளில் செய்யப்பட்ட ஆய்வின் பொழுது பத்து சதவீத மாணவர்கள் தமக்கு தெரிந்தவர்கள் விபசாரம் செய்வதாகக் கூறினார்கள்.

பல்கலைக்கழகங்களில் படிக்கும் ஏழை மாணவர்கள் பகுதி நேர வேலை பார்ப்பது வழக்கமாக நடப்பது தான்.ஆனால் பகுதி நேர வேலை படிக்கும் நேரத்தை ஆக்கிரமிக்கிறது.மேலும் வேலை செய்த களைப்பு காரணமாக படிப்பில் கவனம் செலுத்த முடிவதில்லை.அத்தகைய காரணங்களால் பல மாணவிகள் ஒரு உணவு விடுதியில் வேலை செய்வதை விட விபசாரம் மேல் எனத் தேர்ந்தெடுக்கின்றனர். விபசாரம் செய்வதன் மூலம் பணம் இலகுவாகக் கிடைக்கின்றது. நேரத்தையும் மிச்சம் பிடிக்க முடியும். விபசாரத்தில் ஈடுபடும் மாணவிகள் அது குறித்து எவருடனும் பகிர்ந்து கொள்வதில்லை.

இணைய இதழ் ஒன்றுக்கு பேட்டியளித்த மாணவி ஒருவர்:

இணையத்தளம் மூலமாக வாடிக்கையாளர்களை பிடிப்பதாகவும் சில நாட்கள் பேசிப்பார்த்து நம்பிக்கை வந்த பின்னரே ஹோட்டல்களில் சந்திப்பதாகவும் தெரிவித்தார். கல்லூரியில் கூடப் படிக்கும் மாணவி ஒருவர் உணவு விடுதியில் வேலை செய்வதாக சொன்னார். மூன்று மாதங்களின் பின்னர் ஒரு கார் வாங்கினார். உணவு விடுதியில் என்ன சம்பளம் கொடுக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். மூன்று மாதங்களில் கார் வாங்குவதானால் வேறு தொழிலில் ஈடுபட்டிருக்க வேண்டும். பல மாணவிகள் காதலன் என்ற பெயரில் பணத்துக்காக ஒருவனுடன் உறவு வைத்துக் கொள்கின்றனர்.

ஐரோப்பிய நகரங்களில் சட்டபூர்வ விபசாரங்களுக்கு உதவும் அரசு அல்லது தொண்டு நிறுவனங்கள் தம்மிடம் மாணவிகள் பற்றிய புள்ளி விபரம் எதுவும் இல்லை என தெரிவிக்கின்றனர். ஆனால் அதே நேரம் தம்மிடம் உதவி பெறும் விபசாரிகளில் மாணவிகளும் இருக்க வாய்ப்புண்டு என்றனர். மாணவிகள் விபசாரத்தில் ஈடுபடுவது தண்டனைக்குரிய குற்றமல்ல. ஆயினும் அவர்கள் பகிரங்கமாக விளம்பரம் செய்யத் தடை உள்ளது.பல்கலைக்கழக நிர்வாகங்கள் இந்தப் பிரச்சினை இருப்பதை மறுக்கின்றன.வறுமை காரணமாக கல்விக் கட்டணம் கட்ட முடியாத மாணவர்களுக்கென அரசு மானியம் வழங்குவதாகவும் அதைப் பயன்படுத்தலாம் என்றும் தெரிவித்தனர்.அண்மைக்காலமாக மானியத்திற்காக விண்ணப்பித்த மாணவர்கள் தொகை அதிகரித்திருப்பதை ஏற்றுக்கொண்டனர்.ஆனால் நாட்டு நிலைமை அவர்கள் சொல்வது போன்றில்லை.

மேற்கு ஐரோப்பா மாறி வருகின்றது.முன்பெல்லாம் ஒன்றில் கல்வி இலவசமாக கிடைத்தது.அல்லது வருமானம் குறைந்தவர்களின் கல்விக் கட்டணத்தை அரசு கட்டி வந்தது.அந்தக் காலம் இப்போது மலையேறிவிட்டது.

இங்கிலாந்தில் 12 வயது சிறுமிகள் கருத்தடை மாத்திரைகள் பயன்படுத்துவது கணிசமாக அதிகரித்துள்ளது.

வேறு விதங்களிலோ நீண்ட கால கருத்தடை முறைகளைப் பயன்படுத்துகின்றனர். அதாவது இவர்கள் ஆண் நண்பர்களுடன்

கோடிக்கும் அதிகமானோர் பல் வேறு வகையான கருத்தடை சாதனங்களை உபயோகிக்கின்றனர். சிறுமிகள் கருத்தடை சாத

# பிஞ்சிலே பழுத்தவைகள்



இங்கிலாந்தில் கருத்தடை சாதனங்கள் விற்பனை, பயன்பாடு குறித்து சமீபத்தில் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. இதில் தெரியவந்த பரபரப்பு தகவல்கள்;

இங்கிலாந்தில் 12 வயதுக்கு உட்பட்ட சிறுமிகள் கூட கருத்தடை மாத்திரை பயன்படுத்துகின்றனர். இது புதிது இல்லை என்றாலும் கடந்த 10 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 5 மடங்கு அதிகரித்துள்ளது. தற்போதைய நிலைவரப்படி 12 வயதுக்கு உட்பட்ட சிறுமிகள் 1000 பேர் கருத்தடை மாத்திரை பயன்படுத்துகின்றனர். 13 வயதுச் சிறுமிகள் சுமார் 200 பேர் உ

தொடர்ந்து செக்ஸ் வைத்துக் கொள்கின்றனர்.

நாட்டில் 4

னங்கள் பயன்படுத்துவது பெற்றோருக்குத் தெரிவதில்லை. கருத்தடை சாதனங்கள் பயன்படுத்த குறைந்தபட்ச வயது 16 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி 15 வயதுக்கும் குறைவான சுமார் 58 ஆயிரம் சிறுவர், சிறுமிகள் கருத்தடை மாத்திரை பயன்படுத்தியது தெரிய வந்தது. இதில் 1999 இல் 23 ஆயிரமாக இருந்தது.

சுமார் 500 டாக்டர்களிடம் கேட்கப்பட்ட விபரங்களின் அடிப்படையில் இத்தகவல் தொகுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அக்கம் பக்கம்

# எதுக்கும் ஒரு மனசு வேண்டும்

அன்று ஞாயிற்றுக்கிழமை கடையில் பொருட்கள் வாங்கப் போயிருந்தேன். வயது முதிர்ந்த இருவர் அன்றைய பத்திரிகையை வாசித்து அதில் வந்த விடயங்களை அவர்கள் அலசி ஆராய்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் உரையாடல் இது.

கனகண்ணை இந்தப் பத்திரிகையைப் பாருங்கோ. வன்னியிலிருந்து வந்த மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகினம். ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ஏதோவொரு வகையில் ஒவ்வொரு பிரச்சினை தலைதூக்கி நிற்குது. ஓம் பரமு அண்ணை உண்மை தான். பெற்றோரை இழந்த பிஞ்சுப் பாலகர்கள் எத்தனையோபேர் தமக்கேற்பட்ட இழப்பினைத் தெரியாது தம் பாட்டிமார் ஏனைய உறவினர்களுடன் தங்கி வாழினம்.

இங்கே பாருங்கோ தன் கணவனையும் மகன்மாரையும் இழந்து ஒரு அபலை நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். அவருக்குத் தேவையான ஏதாவது உதவி வழங்கும்படி கேட்டிருக்கினம். தையல் தெரியுமாம் யாராவது ஒரு தையல் மிசின் வாங்கிக் கொடுத்தினம் என்றால் அந்தப் பெண் தன் வாழ்வை தன் சொந்தக்காலிலே நின்று தன்னைக் காப்பாற்றும் எல்லோ. இங்கே பாருங்கோ கனகண்ணை மற்றொரு குடும்பத்திலை 6 வயதுப் பிள்ளையும் 3 வுயதுப்பிள்ளையும் தனியத்தான் இருக்கினம். அவர்கள்பேத்தி எதுவுமற்ற நிலையில் இவர்களுக்கு எப்படிக் கல்வி வழங்குவது என்று தெரியாமல் தத்தளிக்கிறா. அதுமட்டுமா தன் தந்தையை இழந்து தன் தாயார் எதுவித வேலையும் செய்யு ஆற்றலை இழந்த நிலையில் தன் தாயாரைக் காப்பாற்றியபடி தன் கல்வியைத் தொடர எதுவித வருமானமும் அற்று இன்னல்படுகிறாள். 15 வயது பையன் பெற்றோரை இழந்து தன் கல்வியைத் தொடர எத்தனையோ மைல்கள் நடந்தே செல்கிறானாம்.இந்தப் பையனுக்கு ஒரு சைக்கிள் வேணுமாம்.

ஓம் பரமு அண்ணை பத்திரிகையில் அடிக்கடி போடுகினம் தான். இப்படி வந்தவர்களுக்கு உண்மையிலே உதவி செய்யத்தானே வேணும். எங்கடை ஆட்கள் நிறையச் செய்யினம் தான். ஆனால், சிலர் இவர்களைக் கண்டுகொள்வதே இல்லை. ஆனால், நிறையவே ஆடம்பரச் செலவுகளைச் செய்யினம்.

என்ன கனகண்ணை ஆடம்பரச் செலவு. அண்ணை மற்றப் பக்கத்தைப் புரட்டிப் பாருங்கோ. மரண அறிவித்தல் இருக்கு. மற்றப் பக்கம் ஒருவரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி இருக்கு. அதுக்கென்ன அண்ணை. இதுக்குக் கிட்டத்தட்ட எவ்வளவு செலவாகும். நான் நினைக்கிறேன் ஒரு 20,000 ரூபா செலவாகும். இல்லை பரமண்ணை மரண அறிவித்தல் கொடுப்பது என்னத்துக்காக? இதுகூட கனகண்ணை உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் சொல்லுங்கோ பார்ப்போம்..இன்னார் காலமானார் என்பதனை ஏனையோர் அறிந்து கொள்வதற்காகத் தான் இந்த மரண அறிவித்தலை இப்படிப் போட்டாலும் சரி,சிறிதாகப் போட்டாலும் சரி இவர்தான் இறந்தார் என்று எல்லோருக்கும் தெரியும் தானே. மரண அறிவித்தல் கொடுப்பது இவர் காலமானார் என்பதனை உற்றார், உறவினர்கள் அறிந்து கொள்வதற்காகத்தான். ஆனால், இன்று தமது வசதிக்கேற்ப ஒரு பக்கம் எனக் கொடுக்கிறார்கள். பத்துப் பிள்ளையும் வெளிநாட்டில் இஞ்சை பெற்றோர் முதியோர் இல்லத்தில். இறந்தவுடன் வெளிநாட்டு காசிலை 10 பிள்ளையும் 10 நாட்டையும் போட்டு இவரது உறவினர் வீட்டில் இறுதிக் கிரியை நடைபெறும். என்ன கனகண்ணை அப்பதானே தெரியும் அவர்கள் வசதியானவர்கள் என்று. இந்தக் கதையைக் கேளுங்கோ. போன கிழமை இந்த ராமுவின் மகன் வந்திருந்தான். தகப்பனின அந்தியேட்டிக்கு நான் போய் இந்தக் கஷ்டப்பட்ட பிள்ளைகளுக்கு உதவி செய்வதைப் பற்றிச் சொன்னேன். அவன் சொன்னான் இப்ப வசதியில்லை அண்ணை. நான் போய் ஏதாவது செய்யிறன் எண்டான். நானும் அவன் பாவம் எங்கை என்ன கஷ்டமோ என நினைத்தேன். சரி அந்தியேட்டியன்று போனேன். எனக்கு ஒரே ஆச்சரியம். வீட்டில் சமையல் செய்ய ஆட்கள் இல்லை. அதுதான் ஹோட்டலில் இருந்து சாப்பாடு. சைவஉணவு,அசைவஉணவு,ஐஸ்கிறீம் என்று ஒரே அமர்க்களம். இவர்களுக்கு உதவி செய்ய காசு பின்பு அனுப்புறேன் என்று சொன்னவன் இங்கை இப்படிக் காசை கரைக்கிறானே. இதுதான் சொல்லுறது செய்யிறதற்கும் ஒரு மனசு வேணும் என்று.

அண்ணை இறந்தவரின் பெயராலே யாருக்காவது உதவி செய்தால் அதுவே பெரிய புண்ணியம். இப்படிப் பத்திரிகையில் போட்டாலும் இப்படிச் செலவு செய்தாலும் தான் அவர்களின் ஆத்மா சாந்தியடையும் என்று இல்லை. அவர்கள் பெயராலே நாம் ஏதாவது ஒரு உதவி செய்வோமேயானாலும் அவர்கள் ஆத்மா சாந்தியடையும்.ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்த பெரிய புண்ணியமும் வந்து சேரும்.

சரி பரமு அண்ணை நாம் இதைப்பற்றி ஆராய்ந்து என்ன பிரயோசனம். நாம் இதை வெளியில் கதைக்க உதுகளுக்கு சாப்பிட்டுப்போட்டு பொழுதுபோகாமல் பத்திரிகையை வாசித்துவிட்டு விமர்சனம் செய்யுதுகள். யார் என்னத்தை போட்டாலும் மற்றவருக்கு வாசித்துப்போட்டு கிடக்குதுகள் தானே. ஏதோ பெரிய சீர்திருத்தவாதி என்ற நினைப்போ எனத் திட்ட போடுகுதுகள். நாம் நமக்குள்ளே தான் கதைக்க முடியும். இதைக் கேட்கவா முடியும். எப்ப தாங்களாய் உணர்ந்து திருந்தினமோ அப்ப இங்கு ஏழை என்பவர் கொஞ்சம் குறையும் அண்ணை. அன்று பேப்பரிலே ஒரு கவிதை போட்டிருந்தது.

'உண்ண உணவற்று
இருப்பவனும் ஏழை
இன்னொருவன் கஷ்டப்படும் போது
உதவாது இருப்பவனும்
ஏழை'

அவர்கள் உரையாடல் தொடர்ந்தது. நான் அவர்கள் உரையாடலின் உண்மையினைச் சிந்தித்துக்கொண்டு என்வீடு நோக்கிப் புறப்பட்டேன்.

**போதினி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மாழ்வாரும் மாணிக்கவாசகரும்

வித்துவான் உ.கருணைச்சிவப்பிரகாசம்

தமிழ்நாட்டில் சைவம், வைணவம் என்னும் இருபெரும் சமயங்களும் இரண்டு கண்கள் போலச் சிறந்து விளங்குவன. இவ்விரண்டும் பழைமையும் பெருமையும் வாய்ந்தது.

ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியம் எனும் இலக்கண நூலிலேயே, 'மாயோன் மேய காடுறை உலகம்' என்று முல்லை நிலத்திற்கு உரிய தெய்வம் திருமால் என்பது சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அதைத் தழுவி பிற்காலததில் 'அங்கண் முல்லையின் தெய்வம் என்று அருந்தமிழ் உரைக்கும் செங்கண்மால்' என்று சேக்கிழார் பெருமானும் வழி மொழிந்துள்ளார்.

'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேன்' என்று நம்மாழ்வார் பாடுவதற்கு அடிப்படையாக, 'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பில், தாவா விழுப் புகழ் பூவை நிலை' என்று தொல்காப்பியம் விதித்திருத்தலும், திருமால் நெறியின் தொன்மையினை வலியுறுத்தப் போதிய சான்றாகும்.

'சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிய பொருள் இது' என்று விளக்கிய திருவள்ளுவரும் தாம் எந்த சமயத்தையும் வெளிப்படையாகக் கூறாத இயல்பினராயினும்.

**“மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகை முடியத் தாவிய சேவடியால்” அளந்த திருமாலைப் பற்றிக் (குறள்-610)** குறிப்பிட்டுள்ளார்.

இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே, சங்க காலத்தில் திருவேங்கடத் திருப்பதியில், வேங்கடேசப் பெருமாள் நின்ற கோலத்தில் விளங்கிக் காட்சிதரும் சிறப்பு, சிலப்பதிகாரத்தில் எழிலுற இனிது விளக்கப்பட்டுள்ளது. இதனால் 2000 ஆண்டுகளுக்கும் முன்னரே வைணவ சமயம் தமிழ்நாட்டில் தழைத்தோங்கியிருந்த தன்மையும் தொன்மையும் புலனாகின்றன.

முதலாழ்வார்களுள் ஒருவரான பேயாழ்வார் சிவபெருமானும் திருமாலும் பிரிவறக் கலந்து பிணைந்து, இணைந்து தருவேல் கடமலையின் கண் ஒருருவாய்க் காட்சி தருவதைத் தம்செய்யுளில் இப்படி அழகுறப்பாடி அருளியுள்ளார்.

**'தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்'**
**சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் - சூழும்**
**திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு**
**இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து'**

இப்பாடல் வழி பண்டைக்காலத்தில், தமிழக மக்களிடையில் பரவி, நிலவியிருந்த சைவ - வைணவ சமரச மனப்பான்மை தெளிவுறத் தெரிகிறது. சமயம் மக்களைப் பிரிக்கக் கூடாது. உலகெங்கிலும் உள்ள நல்லறிஞர்கள் பலரும், இந்நாளில் இதனையே பெரிதும் வற்புறுத்தி வருகின்றனர். அத்தகையதொரு சிறந்த நல் விருப்பத்துடனும் குறிக்கோளுடனுமே நம்மாழ்வாரும் மாணிக்கவாசகரும் வாழ்ந்தார்கள்.

பாண்டிய நாட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி நதிக்கரையில் திருக்குருகூர் என்னும் தலத்தில், காரியார் - உடையார்நங்கையார் எனும் தம்பதிக்கு மைந்தராகத் தோன்றியருளினார் நம்மாழ்வார். ஆழ்வார்கள் அனைவருமே மிகவும் சிறப்புடையவராயினும் பெரிதும் போற்றப்படுபவர் நம்வாழ்வார். திருவிருத்தம், திருவாசியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி எனும் நான்கு நூல்களை நமவாழ்வார் அருளிச் செய்துள்ளார்.

பாண்டிய நாட்டில்; மதுரைக்கு அருகில் உள்ள திருவாதவூர் என்னும் திருத்தலத்தில், சம்புபாதாசிரியர் - சிவஞானவதி அம்மையார் தம்பதிக்கு மைந்தராகத் தோன்றியவர் மாணிக்கவாசகர். அவர் இளமையிலேயே கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினார். அரிமர்த்தணன் என்னும் பாண்டிய மன்னனின் முதல்மைச்சராகத் திகழ்ந்தார். திருவாசகம், திருக்கோவையார் என்னும் இருபெரும் நூல்களை இயற்றினார். நம்மாழ்வார், மாணிக்கவாசகர் என்னும் இருபெரும் சான்றோர்களும் வேறு வேறு இடத்தில், வேறு வேறு சமயத்தைச் சேர்ந்தவர்களாகத் தோன்றியிருப்பினும் 'சான்றோர் சான்றோர் பாலர் ஆவர்' என்று புறநானூறு பாடுவது போல, தம்முள் பலவகைகளில் ஒப்புமைத் தன்மைகள் உடையவராகத் திகழ்கின்றனர்.

ஆன்மிக வளர்ச்சியின் பல்வேறு படிநிலைகளையும் உணர்ச்சித் திறன்களையும் திருவாசகம் அழகிய பாடல்களினால் விளக்கிக் காட்டுகிறது என்று ஜி.யு.போப் முதலிய பேரறிஞர்கள் கூறுவர். அம்முறையில், நம்மாழ்வார் பாடிய 'திருவாய்மொழியும் கூட, ஆன்மிக வளர்ச்சியின் பல்வேறு படிநிலைகளையும் உணர்ச்சித் திறன்களையும் அழகிய இனிய பாடல்களினால் அருமையான சொல்லோவியங்களாக அமைத்துக்காட்டுகிறது. 'ஆசாரிய இருதயம்' என்னும் அரும்பெரும் வைணவத் திறனாய்வு நூல் இதை அழகுற ஆராய்ந்து, விரிவாக விளக்குகிறது.

நம்மாழ்வார் பாடிய திருவாய்மொழியையும் மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவாசகம், திருக்கோவையார் என்பனவற்றையும் பண்டைத்தமிழ்ச் சான்றோர்கள் பெரிதும் போற்றிப் புகழ்ந்து, வியந்து, துதித்துள்ளனர்.

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியில் ஐந்துவகையான சிறந்த பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன என்று வைணவப் பெருஞ்சான்றோர்கள் கூறுவர். அந்த ஐந்து பொருள்களும் 'அர்த்த பஞ்சமம்' எனப்ப டும். அவை,




இறைவனது தன்மை, உயிரின் தன்மை, உயிர்கள் இறைவனின் அருளைப்பெறும் நெறியின் தன்மை, உயிர்கள் அருளைப்பெற ஒட்டாமல் செய்யும் தடையின் தன்மை, அருளால் எய்தும் பேரின்பத்தின் தன்மை. இவ்வைந்து பொருள்களை நம்மாழ்வார் தம்முடைய 'திருவாய்மொழியின் ஆயிரம் பாடல்களால் விளக்கி அருள்கிறார்.

மாணிக்கவாசகரின் நூல்களிலும் கூட, இறைவனின் நிலை, உயிரின் இயல்பு, தளையாகிய பாசங்களின் தன்மை, அருள்நலம், பேரின்பம் என்னும் இந்த ஐந்து வகைப் பொருள்கள் ஆங்காங்கே அழகுற விளக்கப் பெற்றிருக்கக் காண்கிறோம். இவ்வாறே மாணிக்கவாசகர் பாடல்களில் விளக்கப்படும், 'இறை - உயிர் - தளை' (பதி-பசு-பாசம்) எனப்படும் மூன்று பொருள்களும் நம்மாழ்வாரின் பாடல்களில், 'சித்து - அசித்து - ஈஸ்வரன்' என்று வழங்கப்படும்.

நம்மாழ்வாரின் பாடல்களில் வைணவ சமயத்துக்குரிய தத்துவக் கொள்கைகள் பலவும் பெரிதும் நிறைந்திருக்கும். அவர் அருளிச் செய்த 'திருவாய்மொழி' முதலிய திவ்யப் பிரபந்தப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டே வைணவ சமயத் தத்துவக் கொள்கைகள் தொகுத்து, வடித்துத் தரப்பட்டுள்ளன. “உடல்மிசை உயிர் எனக் கரந்து எங்கும் பரந்துள்ளன்” என்னும் 'திருவாய்மொழிப்' பாடலின் ஒரு வரியை அடிப்படையும் ஆதாரமுமாகக் கொண்டே, விசிஷ்டாத்வைதம் என்னும் பெருமாளிகை ராமானுஜரால் எழுப்பப்பட்டது எனின், நாம், நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பெருமையைச் சிந்தித்து உணரலாம்.

அவ்வாறே மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும் 'சைவசித்தாந்தம்' என்னும் தத்துவக் கொள்கைகள் பலவற்றிற்கு அடிப்படையும் ஆதாரமும் ஆக அமைந்தது என்பதை நாம் சிந்தித்து உணர்ந்து இன்புறலாம்.

சிவஞான போதம் என்னும் சைவ சித்தாந்த சாத்திரத்தில் அதன் 8 ஆம் சூத்திரச் செய்யுள் இப்படி நவில்கிறது.

**'ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனைத்**
**தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு**
**அந்நியம் இன்மையின் அரண்கழல் செலுமே'**

இதையே, “இறைவனே குருவாக வருவான், குருவும் இறைவனும் வேறல்லர், இறைவனும் குருவும் ஒன்றே” என்று கூறுவதற்கு, மாணிக்கவாசகர் அருளிய திருவாசகப்பாடல்கள் சிறந்த அடிப்படையும் ஆதாரமும் ஆகும்.

இவ்வாறு தத்தம் சமய தத்துவக் கொள்கைகளை விளக்கும் திறனில், நம்மாழ்வாரும் மாணிக்கவாசகரும் தம்முள் ஒப்புமை பெரிதும் உடையவராகத் திகழ்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்காருவின் பிறப்பு



கங்காரு அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த விலங்கு. இதன் குட்டிகள் முழுமையாக வளச்சியடைவதற்கு முன்பே பிறந்து விடுகின்றன. பாக்கி வளர்ச்சியெல்லாம் கங்காருவின் வயிற்றுப் பையில்தான் நடக்கும். குட்டி பிறந்த உடனே வயிறு வழியாக ஊர்ந்து பைக்குள் வந்துவிடும். பிரசவ நேரத்தில் கங்காரு, குட்டி வெளியே வருகிற துளை முதல் வயிற்றின் மேல் பகுதிவரையான பாகத்தை நக்கும். இப்படி நக்கி நக்கி தன் உடல் ரோமத்தின் வழியே ஒரு பாதையை ஏற்படுத்தும். குட்டி இந்தப் பாதை வழியே ஊர்ந்து பைக்குள் வந்துவிடும். அம்மாவின் பாலைத்தவிர மற்ற உணவை செரிக்கக்கூடிய திறன் வரும் போதுதான் உட்கொள்ளும். இத்திறன் வரும் வரை குட்டி, அம்மாவின் பைக்குள்ளேயேதான் இருக்கும். குட்டியின் உடற்பகுதிகளெல்லாம் முழுமையாக வளர்ச்சியடைந்த பிறகுதான் கங்காரு தன் குட்டியை கீழே இறக்கிவிடும். பிறகு எப்போதாவது நரியோ, கழுகோ, மற்ற விலங்குகளோ பிடிக்க வரும்போது குட்டி ஓடி வந்து தன் தாயின் பைக்குள் ஏறி ஒளிந்து கொள்ளும்.





## பவளப் பாறைகள்

பவளம் என்பது பொதுவான பெயராகும். முதுகெலும்பற்ற, பல கால்களை உடைய உயிரினங்கள் கடலில் வசித்து வருகின்றன. அந்த உயிரினங்கள் கடல் நீரில் உள்ள தாது உப்புகளை உணவாக உட்கொள்கின்றன. அப்போது அவற்றின் உடலில் தாது உப்புகள் படிந்து, இறுகி பாறையாக மாறிவிடுகின்றன.

8 முதல் 35 மீற்றர் வரையுள்ள ஆழத்தில் பச்சை, கருஞ்சிவப்பு, பழுப்பு, மஞ்சள் ஆகிய நிறங்களில் பவளப் பாறைகள் காணப்படுகின்றன. 50 மீற்றருக்கு அதிகமான ஆழத்தில் வெள்ளையாகவோ அல்லது சாம்பல் நிறத்திலோ உள்ளன. பொதுவாக பவளங்கள் சிவப்பு நிறத்தில் காணப்படும் என்று முற்காலத்தில் இருந்து கூறப்படுகிறது. சிவப்பு நிறப் பவளங்களும் உள்ளன. ஆனால், இவை எல்லாம் இடங்களிலும் காணப்படுவதில்லை. மத்திய தரைக்கடல் பகுதியில் மட்டுமே சிவப்பு நிறப் பவளங்கள் காணப்படுகின்றன.

பவளப் பாறைகளின் புதை படிவங்களில் இருந்து பெட்ரோலியம் மற்றும் உலோகங்கள் எடுக்கப்படுகிறது. இந்தப் புதைவடிவங்களில் ஓரளவு துத்தநாகமும் செம்பும் அடங்கியிருக்கிறது. பண்டைய காலத்தில் இருந்தே பவளங்கள் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## குறுக்கெழுத்துப்போட்டி - 46



**இடமிருந்து வலம்**

1. இது இட்டவரை உள்ளளவும் நினை என்பர்
4. கற்பக தரு (திரும்பியுள்ளது)
7. போதையை இவ்வாறும் சொல்வர் (குழம்பியுள்ளது)
10. உறைப்பு என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
15. காதலுக்கு அடையாளமான மலர் (திரும்பியுள்ளது)
17. சமாதானத் தூதுவர் (திரும்பியுள்ளது)
21. கோமாதா (திரும்பியுள்ளது)
23. இந்து திருமணத்தில் இது மிதித்து அருந்ததி பார்ப்பர் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. உறுதி என்றும் சொல்லலாம்
3. கைகளுக்குப் போடுவது (தலைகீழ்)
4. வீடு (தலைகீழ்)
11. காணிகளின் அளவு முறை (குழம்பியுள்ளது)
13. நம்பிக்கை மோசடி
17. விஜய் நடித்து அண்மையில் வெளியான படம் (தலைகீழ்)
19. சபை என்றும் சொல்லலாம் (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப்போட்டி - 44 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. வெற்றி | 1. வெறி |
| 4. நான் | 3. மறி |
| 7. மருதம் | 4. நாதம் |
| 12. வம்பு | 5. வன்மம் |
| 15. கடன் | 8. கரும்பு |
| 20. திம்பு | 11. மீன் |
| 23. நேசம் | 16. திடம் |
| 26. சிகை | 19. நேரு |
| | 22. புசி |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**செல்வன் ச.கீதசபா,**
**ஆண்டு 6A, யாழ். இந்துக் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

### பாராட்டுப்பெறுவோர்

01. எஸ். லக்ஷ்மணன்,
இல. 20, டீ.எஸ்.சேனாநாயக்க வீதி,
கண்டி.

02. ஏ.எச்.எம்.றபீக்,
இல. 5, கிளினிக் லேன்,
காத்தான்குடி-5.

03. ஏ.செபஸ்தியன்,
இல. 24/2, உடுப்பிட்டிய,
உக்குவளை.

04. கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோவிலடி, வட்டுக்கோட்டை.

05. எம்.எஸ்.சித்தியும்மா,
பள்ளிவாசல் தோட்டம்,
பெரியகடை, திருகோணமலை.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு–15
என்னும் முகவரிக்கும் அனுப்புங்கள்...

பெயர் : ..................................................

முகவரி : ..................................................

..................................................

## 'மின்னல்' தகவல்கள்

மழை பெய்வதற்கு முன்பாக இடி, மின்னல் போன்ற அறிகுறிகள் தோன்றுவதைக் கண்டிருப்போம். கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் கிலோமீற்றர் கணக்கில் பெரியதாகத் தோன்றும். மின்னல் சில சமயங்களில் உயிரையும் பறித்துவிடுகிறது. அந்த மின்னல் பற்றிய சில 'திடுக்' செய்திகள்.

மின்னல் ஒரு மனிதனைத் தாக்கும் பொழுது சில சமயங்களில் அவனது உடலில் எந்தவிதக் காயங்களையும் ஏற்படுத்தாமல், அவனது ஆடைகளை மட்டும் எரித்து விடுகிறது. சில சந்தர்ப்பங்களில் ஆடைகளும் எந்தவித சேதாரமும் ஏற்படுத்தாமல் அவனது உயிரைப்போக்கிவிடுகிறது.

வலிமைமிக்க இரும்புத் தடிகளையும் மின்சாரக் கம்பிகளையும் உருக்கி விடக்கூடிய ஆற்றல் மின்னலுக்கு உண்டு. மின்னலின் தாக்கத்தைத் தவிர்ப்பதற்காக கட்டிடங்கள் மீது பொருத்தப்பட்டிருக்கும் மின்னல் தாங்கி இரும்புக் கம்பிகளின் நுனிப்பகுதியையும் சில சமயங்களில் அது எரித்து விடும். மின்னல்கள் பல வடிவங்களிலும் தோற்றமளிக்கின்றன. ஒரு நூலில் கோர்க்கப்பட்ட மணிகள் வடிவத்தில் விட்டு விட்டுத் தோன்றும் மின்னலும் இருக்கிறது. ஆனால் அந்த மின்னல் அடிக்கடி தோன்றுவதில்லை. அது சுமார் 15 முதல் 20 ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றுவதாகக் கூறப்படுகிறது. 'ராக்கெட் மின்னல்' என்றொரு வகை மின்னல் உண்டு. இது சுமார் ஒன்று அல்லது ஒன்றரை விநாடி காலம் தான் தோன்றும். அந்த நேரத்திற்குள்ளாகவே மிகப்பெரிய மரங்களின் கிளைகளை அடியோடு வீழ்த்தி விடும். உருண்டையான பந்துவடிவத்தில் தலை அளவுக்குக் காணப்படும் மின்னலும் உண்டு. இது சில சமயங்களில் பெரும் சத்தத்துடன் வெடிக்கிறது. சில சமயங்களில் எவ்வித விளைவுகளையும் ஏற்படுத்தாமல் தானாகவே தோன்றி மறைந்து விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊடகங்களில் பெண்களின் நிலை...?

யாழ்.குடாநாட்டில் உயர் பதவிகளைப் பெண்கள் அலங்கரித்துக்கொண்டிருப்பது ஒருபுறம் மகிழ்ச்சியளித்தாலும் ஊடகத் துறைகளில் அவர்களின் பணிகள் மிக மிகக் குறைவாகவே இருப்பது மறுபுறம் வேதனையளிப்பதாக உள்ளது. இதற்கும் சமூகத்தின் இறுக்கமான கட்டமைப்பும் பாதுகாப்பின்மையுமே பிரதான காரணங்கள் என்று கூறப்படுகின்றன. உலகளாவிய ரீதியில் பெண்கள் உலகம் இமயத்தை விஞ்சிச் சாதனை படைத்துக் கொண்டிருக்க யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை அவர்கள் இன்னமும் தவழ்ந்து கொண்டு தான் இருக்கின்றனர்.

ஊடகங்களில் பொதுவாகப் பெண்களின் 'பணிகள்' குறைவாக இருக்கும் அதேநேரம், அவர்களின் 'பயன்கள்' அங்கு நிறைவாகவே இருக்கின்றன. அழகொன்றையே கருத்திலெடுத்து காட்சிப் பண்டங்களாக அவர்களைப் பயன்படுத்தும் ஊடகங்கள், அவர்களின் அறிவைக் கவனத்தில் எடுத்து கருத்துப் பண்டங்களாகப் பயன்படுத்துவது மிகமிகக் குறைவே!

உலகம் விடிந்துவிட்டது. சமத்துவம் மலர்ந்து விட்டது என்று இங்குள்ள சிலர் பிதற்றினாலும் உண்மை நிலை வேறு! ஆண்களின் அடக்குமுறைக் கரங்கள் பெண்களுக்கு விலங்கு சூட்டவே சமயம் பார்த்திருக்கின்றன. குறிப்பாக யாழ்.குடாநாட்டில் இந்நிலை மோசமாகவே உள்ளது.

சமூகத்தளைகளைக் களைந்து ஒரு பெண் சாதிக்கக் காலடி எடுத்து வைக்கையில் பிரச்சினைகளும் அவளுடன் புறப்பட்டுச் செல்லத் தொடங்குகின்றன. அத்துடன் சமூகத்தின் 'உயரிய விருதுகளும்', 'பட்டங்களும்' அவளைத் தாராளமாகவே மனமொடியச் செய்யக் காத்திருக்கும். இவற்றையெல்லாம் தகர்த்தெறிய வேண்டுமென்றால், அவள் துப்பாக்கி முனையை விடக் கூரிய சக்தி வாய்ந்த முனையான பேனா முனையைத் தேர்ந்தெடுத்து வாகை சூட வேண்டும்.

'ஊடகத்துறையில் பெண்கள் துணிச்சலுடன், தமது முழுமையான பங்களிப்பை வழங்குவதன் மூலமே கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்' என்று பாகிஸ்தான் ஊடகவியலாளர் ரஹிமுல்லாலு ஹிப்ஸாலாகி கூறியிருப்பது நிதர்சனமே!


பெண்களின் தலைவிதிகளையே தலைகீழாக மாற்றி எழுதிக்கொண்டிருக்கின்ற ஊடகத்துறைகளில், பெண்கள் கரங்களும் சமநிலை கொண்டால் தான் அவர்கள் உலகம் தகராறு இன்றி வரலாறு படைக்கும்.

ஊடகத்துறையில் சமவாய்ப்புகள் வழங்கப்பட்டாலும் பெண்கள் அவற்றை ஏற்பதற்குத் தயங்குகிறார்கள் அல்லது முன்வருவதில்லை என்ற குற்றச்சாட்டுகள் ஒருபுறம் ஒலித்தாலும் அவ்வாறு துணிந்து முன்வரும் பெண்கள் மீது சமூகம் சேறுபூசவே முனைகின்றது. அவர்தம் வீறுநடைதனைக் குறைக்கின்றது.

எமது நாட்டைப் பொறுத்தவரைக்கும் குறிப்பாக அச்சு ஊடகத்துறை என்பது ஆணாதிக்கத்தின் வன்மப் பிடிகளுக்குள்ளேயே இன்னமும் இருப்பதைக் காண முடிகின்றது. இங்கு பெண்கள் குறிப்பிட்ட சில பதவிகளையே வகிக்கின்றனர். அதிலும் அவர்களுக்குக் குறிப்பிட்ட காலக்கெடுவே விதிக்கப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டில் ஒருசில பெண்கள் இத்தகு அச்சு ஊடகங்களில் ஆசிரிய பீடங்களில் பணியாற்றினாலும் அவர்கள் 'களாய்வு நிருபர்களாகச்' செயற்படுவதே இல்லை. குறிப்பாக ஊடகக் கற்கை நெறிகளைத் தொடர்கின்ற பெண் மாணவிகள் இச்செயற்பாட்டில் ஈடுபட்டாலும் பணி நிமித்தம் யாருமே களச்செய்தி சேகரிப்பாளர்களாக இருக்கவில்லை. அத்துடன் புகைப்படவியலாளராகவும் அவர்கள் செயற்படுவதில்லை.

உதவி ஆசிரியர், ஒப்புநோக்குநர், தட்டச்சாளர் மற்றும் பக்கவடிவமைப்பாளர் போன்ற பதவிகளிலேயே அவர்கள் இன்னமும் கடமையற்றுகின்றனர். தமிழ்ப் பத்திரிகைகளைப் பொறுத்தவரைக்கும் அவர்களுக்கு 'ஆசிரியர்' பதவிகளே வழங்கப்படுவதில்லை.





கடந்த சனிக்கிழமை யாழிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த தெற்காசியப் பெண்கள் ஊடக வலையமைப்பின் குழுவினர் யாழ்ப்பாணத்தில் ஊடகத்துறையில் பெண்களின் பங்களிப்பு மிக மிகக் குறைவாகவே உள்ளது என்று சுட்டிக்காட்டியிருந்தனர். அத்துடன், யாழ்.சிகரம் ஊடக இல்லத்தில் பெரும்பாலான பெண்கள் ஊடகக் கற்கை மேற்கொள்வது குறித்துப் பாராட்டியுமிருந்தனர். பெண்கள் ஊடகத் துறையில் சாதிப்பதற்குத் தயங்காது துணிச்சலுடன் முன்வர வேண்டும் எனவும் அம்மாணவிகளிடம் அறைகூவல் விடுத்தனர்.

இங்குள்ள பெண்கள் ஊடகத்துறையில் பணியாற்றுவது ஏன் குறைவாக உள்ளது? என அக் குழுவினர் அலசுகையில், பாதுகாப்புப் பிரச்சினை மற்றும் இறுக்கமான சமூகக் கட்டமைப்பு என்பனவே பிரதான காரணங்களாக முன்வைக்கப்பட்டன.







பெண்களின் பங்கு ஊடகத்துறையில் எப்படி இருக்க வேண்டும் என்று சர்வதேச இணைய வானொலியான வாரணம் எவ்.எம்.இல் பயிற்சி பெறுகின்ற பெண் ஊடகவியலாளரிடம் வினவியவேளை, 'பெண்கள் ஊடகத்துறையில் நிறைய வளர வேண்டும் அதற்கு ஊடகத்துறைகளில் சாதித்த சாதிக்கின்ற பெண்களைப் பற்றி அவர்கள் அதிகம் படிக்க வேண்டும். சமூகத் தடைகளை உடைத்துச் சாதிக்க முயலவேண்டும்' என்றார்.

இதே வினாவை யாழ்.சிகரம் ஊடக இல்லத்தில் கற்கின்ற மாணவி ஒருவரிடம் வினவிய வேளை அவர் பின்வருமாறு கூறினார். 'என்னதான் பெண்கள் அதிகம் படித்தாலும் ஆண்களைச் சார்ந்தே அவர்கள் வாழ வேண்டும் எனும் எண்ணமே யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை உள்ளது. இந்நிலை மாற வேண்டும். 'ஆணாதிக்கக் கரங்களைப் பெண்கள்' அறிவாதிக்கக் கரங்களால் அடக்க வேண்டும். அதற்கு ஊடகங்கள் வாய்ப்பாக அமையும். எம்மைப் போல பலரையும் உருவாக்கப் பல ஊடகப் பயிற்சி மையம் உதயமாக வேண்டும்' என்றார்.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை ஊடகம் பயிலும் பெண்கள் 'ஏட்டுச் சுரைக்காய்' போன்றே இன்னமும் உள்ளனர். இந்நிலை மாற வேண்டும்.

'சீர்தரும் சமத்துவம் தேசிய மகத்துவம்
பார்மீதினிலே-மேலோங்கிடவே
பழகுவோம் உலகிலே
பாமணம் வீசவே-துதி பேசவே'

என்று உடுமலை சொன்னது போன்று தேசிய மகத்துவம் உருவாகிடப் பெண்களும் ஊடகத்துறையில் முழுமையான பணியாற்ற முன்வர வேண்டும்.

சமூகத்தின் பொறுப்பு வாய்ந்த துறையான ஊடகத்துறையில் பெண்களும் பணியாற்றின் எமது தேசம் சுபீட்சம் அடையும்!

எஸ்.ரூபனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரஜினியைப் பார்த்து பொறாமைப்படும் சிரஞ்சீவி

சூப்பர் ஸ்டார் ரஜினியைப் பார்த்தால் எனக்கு மிகவும் பொறாமையாக உள்ளது. நானும் அரசியலைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்துவிட்டு நடிக்க வந்துவிடலாம் போலவுள்ளது என்றார் தெலுங்கு நடிகரும் பிரஜா ராஜ்யம் கட்சித் தலைவருமான சிரஞ்சீவி.

ரஜினி-ஐஸ்வர்யா ராய் நடிக்கும் எந்திரன் படம் தமிழ்,தெலுங்கு,இந்தி என மூன்று மொழிகளிலும் ஒரே நாளில் வெளியாகிறது. சில தினங்களுக்கு முன் தெலுங்கில் வெளியாகும் 'ரோபோ' படத்தின் இசை வெளியீட்டு விழா ஹைதராபாத்தில் நடந்தது. இதில் ரஜினியின் நெருங்கிய நண்பர்களான மோகன்பாபு மற்றும் சிரஞ்சீவி பங்கேற்றனர். 'ரோபோ' இசையை சிரஞ்சீவி வெளியிட்டார். இதில் பேசிய சிரஞ்சீவி எடுத்த எடுப்பிலேயே 'எனக்குப் பொறாமையாக உள்ளது' என்றார்.

மேலும் அவர் கூறுகையில்; 'நான் ரஜினி',மோகன்பாபு மூவரும் மிகவும் நெருங்கிய நண்பர்கள். மூவருக்குமே அரசியலில் வர வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. ஒவ்வொருவராக அடியெடுத்து வைப்போம் என்ற மனநிலையில் இருந்தோம். மோகன்பாபு முதலில் அரசியலுக்கு வந்தார். நான் 'பிரஜா ராஜ்ஜியம்' கட்சி தொடங்கினேன். அரசியல் வாழ்க்கைக்கு வந்ததும் சினிமாவில் நடிப்பதில்லை என்று முடிவெடுத்தேன்.

ஆனால், ரஜினி இவ்வளவு இளமையாகத் திரையில் ஐஸ்வர்யாராயுடன் பாடல் பாடுவதைப் பார்க்கும்போது எனக்குப் பொறாமையாகவுள்ளது. 'ரோபோ' என்ற இந்தியாவின் பிரமாண்டமான படத்தில் ரஜினி கலக்கிக் கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லையே என ஏக்கமாய் உள்ளது. இதையெல்லாம் நான் தவறவிட்டு விட்டேன். இதைப் பார்த்ததும் மீண்டும் சினிமாவில் நடிக்கும் ஆசை வந்து விட்டது எனக்கு.

ஆனால்,பொறாமை என்பது ஒரு கலைஞனாக நான் சொன்னது. ஆனால், அண்ணன் ரஜினி எதைச் செய்தாலும் வெற்றிபெற வேண்டும் என்று வாழ்த்தும் சகோதரன் நான். அவரைப் போன்ற அற்புதமான கலைஞரையும் அருமையான மனிதரையும் பார்க்க முடியாது. இந்தப் படம் சரித்திரம் படைக்கும்' என்றார்.

## Saturday சினிமா

## சொந்தக் குரலில் த்ரிஷா



லேசா லேசாவில் அறிமுகமான த்ரிஷா இதுவரை சொந்தக்குரலில் பின்னணி பேசியதில்லை. குரல் இனிமையாக இருந்தாலும் ஏனோ சொந்தக்குரல் வரம் மட்டும் த்ரிஷாவுக்கு இதுவரை கைகூடியதில்லை. இந்த குறையை போக்க முன் வந்திருக்கிறார்கள் கமலும், கே.எஸ்.ரவிக்குமாரும். மன்மதன் அம்பு படத்தில் சொந்தக்குரலில் பேசும்படி இருவரும் த்ரிஷாவை உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள். த்ரிஷாவும் இதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆக முதல் முறையாக த்ரிஷாவின் சொந்தக்குரலை கேட்கும் வாய்ப்பு ரசிகர்களுக்குக் கிடைக்கவிருக்கிறது.

## ஆர்யாவின் பொய்

தானுண்டு தன் தோல்வியுண்டு என்று சமத்து பிள்ளையாக இருந்த ஆர்யாவும் தன் பங்குக்கு குறும்பு பண்ண ஆரம்பித்துவிட்டார். அறிந்தும் அறியாமலும் என்ற ஒரே ஒரு வெற்றியை வைத்துக்கொண்டு இன்னமும் காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிற திறமை ஆர்யாவைத் தவிர ஒருவருக்கும் வராது. கடைசியாக வந்த மதராசபட்டினம் நகர்ப்புற ரசிகர்களை மட்டும் கவர்ந்திருக்கிறது. சற்றே உள்ள போனால், போஸ்டர் ஒட்டிய பணத்தைக் கூட ஈட்ட முடியவில்லை என்கிறார்கள் தியேட்டர்காரர்கள். இந்த லட்சணத்தில் அகோரியின் அலட்சியம் ஒரு தயாரிப்பாளரை அழவே வைத்திருக்கிறது. சிக்குபுக்கு என்ற படத்தை முடித்து வெளியீட்டுக்குத் தயாராக இருக்கிறது. அப்படத்தைத் தயாரித்த மீடியா ஒன் நிறுவனம். ஐந்து நாட்கள் ஆர்யா பின்னணி பேசினால் படமே ரெடியாகிவிடும். ஆனால் பாஸ் என்கிற பாஸ்கரன் படத்தை முடித்துவிட்டு சிக்கு புக்கு படத்திற்கு போகச் சொன்னார் என்று பிளேட்டைத் திருப்பி போடுகிறாராம். இது தொடர்பாக உதயநிதியிடம் தயாரிப்பாளர் சங்கம் கேட்டபோது நான் அப்படிச் சொல்லவே இல்லை என்கிறாராம் அவர்.



பாஸ் என்கிற பாஸ்கரன்—ஆர்யா, நயன்தாரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





எந்திரன்-ரஜினி, ஐஸ்வர்யாராய்



மழையில ஐஸ்கிரீம், மதிய வெயிலில தேநீர் என்று தினுசா தான் போகிறது நயன்தாராவின் ஸ்டைல். பிரபுதேவாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு சினிமாவுக்கே முழுக்குப் போடப் போறாரு என்று வருகிற செய்திகளைப் பிடிச்சுட்டு இதழோரத்தில் ஒரு இனிப்பான சிரிப்பு சிரிக்கிறாராம்! விரைவில் வரப் போற ஒரு அறிவிப்பு இத்தனை கலவரத்திற்கும் ஒரு முற்றுப் புள்ளி வைக்கும் என்கிறது அவர் தரப்பிலிருந்து கசியவிடும் தகவல்கள் வாசனையை வச்சே வடக்கு, தெற்கு கண்டுபிடிக்கிற ஆளுங்க மத்தியில் இப்படி ஒரு தகவல் கசிஞ்சா சும்மாவிட முடியுமா? தோண்டித் துருவினால் நயன்தாரா நினைக்கிற அந்த நியூஸ் என்னன்னு மெல்ல தெரியவருது. சினிமாவுக்கு முழுக்கு என்கிற செய்தியை பஞ்சராக்கும் விதத்தில் ஷங்கரின் இயக்கத்தில் நடிக்க முயல்கிறாராம் நயன். த்ரி இடியட்ஸ் படத்தில் இலியானா நடிக்கிறார் என்று வந்த செய்தியும் கிட்டத்தட்ட உறுதியான நிலையில் நயன்தாராவும் எப்படி? அதில் என்ன குழப்பம் இப்படத்தில். மூன்று நாயகர்கள் இருக்கிறார்கள் அல்லவா? மூவருக்கும் ஒவ்வொன்று என்று பிரித்துக் கொடுத்தாலும் நயன்தாரா டபுள் அக்டே பண்ணலாமே! ஆனால் அவ்வளவு ஆசையில்லை அவருக்கு, விஜய்யுடன் ஜோடி சேரும் வேடம் கிடைத்தால் நடிக்கத் தயார் என்கிறாராம்.

## வெடி வெடிக்காது

ராவணன் படத்துக்குப் பிறகு விக்ரம் செல்வராகவன் இயக்கும் படத்தில் நடித்தார். நிதிப்பிரச்சினை காரணமாக படம் பாதியில் நின்றது. இதையடுத்து விக்ரம் கே.குமார் இயக்கத்தில் நடிக்கத் தயாரானார். படம் தொடங்கும் முன்பே இருவருக்கும் பிரச்சினை, படம் நின்றது. இந்த இரு படங்கள் நின்றுபோக, மூன்றாவதாக வந்தவர் பூபதி பாண்டியன். வெடி என்று படத்துக்கு பெயர் வைத்து இலியானாவையும் ஒப்பந்தம் செய்தனர். விக்ரமுக்கு இரு வேடங்கள், அதில் ஒன்று பொலிஸ் அதிகாரி வேடம் என்பது வரை முடிவானது. தற்போது இந்த வெடியும் புஸ்வாணமாகிவிட்டது. ஆம், வெடிக்குப் பதில் மதராசப் பட்டினம் விஜய் இயக்கும் படத்தில் நடிக்க தீர்மானித்திருக்கிறாராம். விக்ரம் வெற்றிக்கான தேவை ஒரு நல்ல நடிகரை எப்படியெல்லாம் அழைக்கழிக்கும் என்பதற்கு விக்ரம் ஒரு சிறந்த உதாரணமாகியிருக்கிறார்.

## அசினும் பசு மாடும்...



பாண்டிராஜ் இயக்கத்தில் அருள்நிதி - சுனேனா நடிக்கும் 'வம்சம்' படத்தில் ஒரு பசுமாட்டுக்கு அசின் என பெயர் வைத்துள்ளனர். இது அசினை இழிவுபடுத்துவதற்காக வைக்கப்படவில்லை என்று படத்தின் நாயகி சுனேனா தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்;

'படத்தில் அழகான பசு மாடு முக்கிய வேடத்தில் நடிக்கிறது. அதற்கு அசின் என பெயர் வைக்கப்பட்டுள்ளது. எனக்கும் கதாநாயகனுக்கும் காதல் தூதாக அந்த மாடுதான் போகிறது. கதாநாயகன்தான் அந்த பசு மாட்டை எனக்கு விற்பார். அதற்கு நான் அசின் என பெயர் வைப்பேன். கிராமங்களில் தங்கள் வீட்டு செல்லப் பிராணிகளுக்கு சினிமா நடிகைகள்-நடிகர்களின் பெயர்களைத் தான் இப்போதும் வைக்கிறார்கள். அதற்காக நடிகர் நடிகைகளை அவர்கள் இழிவுபடுத்துவதாகச் சொல்ல முடியுமா? நான் மட்டுமின்றி படப்பிடிப்பு குழுவினர் எல்லோருக்குமே அசின் பசு மேல் பிரியம் அதிகம். எனக்கு மிருகங்களைப் பிடிக்கும். அசின் மீதும் மிகுந்த அன்பு காட்டினேன். நடிகை அசினை நாங்கள் எதற்காக அசிங்கப்படுத்தப் போகிறோம்" என்றார்.

தாராவைப் போலவே மாமி நடிகையையும் ஒருவர் காதலிக்கிறார். இவர் ஏற்கனவே திருமணமானவர். இந்த வில்லங்க காதலுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார். மாமியின் மம்மிசரி, மாமியின் முடிவு என்ன? எனக்குப் பிடித்தால் அகிலமே தடுத்தாலும் அடங்கமாட்டேன் என்று உறுதியாக இருக்கிறார். ஆனால் மாமிக்குப் பிடித்திருக்கிறதா என்பதுதான் மர்மம்.

நமீதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசத்தப்போகும் விமானம்

எதிர்காலத்தில் விமானங்கள் எப்படி இருக்கும் என்பது குறித்து ஏர்பஸ் நிறுவனம் வைத்துள்ள ஒரு மொடல் (**Airbus Concept Plane**) பெரும் பிரமிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்தின் பான்பரோ நகரில் சமீபத்தில் நடந்து முடிந்த சர்வதேச விமானக் கண்காட்சியில் இந்த மாதிரி விமானம் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

தாவர நார்களால் ஆன இதன் இருக்கைகள் உட்காரும் நபரின் உருவத்துக்கேற்ப வடிவம் மாறுமாம். விமானத்தின் மேல் பகுதி உட்பட அதன் பெரும்பாலான பகுதிகள் கண்ணாடியிழையினால் ஆனதாக இருக்கும். இதனால் விமானத்தின் எந்தப் பகுதியில் இருந்தும் முழு அளவில் வெளியுலகைப் பார்த்தவாறே பயணிக்கலாம்.

பயணிகளின் உடல் வெப்பத்தை வீணாக்காமல் அதைப் பயன்படுத்தி விமானத்தின் உள் வெப்பத்தை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பம் கொண்டதாகவும் இந்த விமானம் இருக்கும் என்கிறது ஏர்பஸ். வழக்கத்தைவிட அதிக நீளம் கொண்ட இந்த விமானத்தின் இறக்கைகள் சிறியதாகவே இருக்கும். இந்த இறக்கைகளில் என்ஜின்கள் புதைத்திருக்கும். *U* வடிவத்திலான இதன் வால் பகுதியால் விமானம் குறைந்த விட்டத்திலேயே திரும்ப முடியும்.


மேலும் 'ஹோலோகிராம்' மூலமான அலங்காரங்கள் வெண் தோட்டம் என இந்த விமானம் நம்மை புதிய உலகுக்கே இட்டுச் செல்லும் என்கிறது ஏர்பஸ். இந்த விமானம் 2030 ஆம் ஆண்டில் புழக்கத்துக்கு வரலாம் என்று ஏர்பஸ் நிறுவனம் கூறியுள்ளது.


இந்த விமானக் கண்காட்சியை யொட்டி இந்த நிறுவனம் வெளியிட்டுள்ள 'எதிர்கால விமானங்கள்' என்ற ஆவணத்தில் மேலும் பல ஆச்சரியமான சமாச்சாரங்களும் அடங்கியுள்ளன.

அதில் சில;

* எதிர்காலத்தில் பல சிறிய விமானங்கள் நாரைகள் போல சேர்ந்து இணையாகப் பறக்கலாம்.
* நீண்டதூரம் பயணிக்கும் விமானங்கள் வானிலேயே பெரிய விமானத்தில் தரையிறங்கி மீண்டும் பறக்கலாம்.
* காற்றில் உள்ள நைட்ரஜனையே எரிபொருளாக மாற்றிக்கொண்டு விமானங்கள் பறக்கலாம்.
* சொகுசு கப்பல்கள் (**Cruise Ships**) போல பொழுதைக் கழிக்க கசினோக்கள் உள்ளிட்டவை அடங்கிய சொகுசு விமானங்கள் புழக்கத்துக்கு வரலாம் என்று போகிறது இந்த ஆவணம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

140810-1.indd 14
Process Cyan Process Magenta

இவ்வார மெயிலில் இவர்...



# மானுவல் சன்தோஷ்

கொலம்பியாவின் புதிய ஜனாதிபதியாக கடந்த ஏழாம் திகதி பதவியேற்றிருப்பவர்தான் ஜுஆன் மானுவல் சன்தோஷ் கால்டெரோன்.

கொலம்பியா என்றவுடனேயே எம் அனைவருக்கும் அடுத்து தெரிந்திருக்கும் சொல் அந்நாட்டிலுள்ள பார்க் போராளிகள்தான்.

எந்த ஒரு நாட்டை எடுத்துக்கொண்டாலும் ஏதோவொரு பிரச்சினை அங்கு இருந்து கொண்டேதான் இருக்கும்.

அந்த வகையில்தான் கொலம்பியாவில் பார்க் போராளிகளின் பிரச்சினை ஒருபுறம் இருக்க மறுபுறம் போதைப் பொருள் கடத்தல் பிரச்சினையும் சற்றுத் தளை விட்டுள்ளது.

இவ்வாறான நிலையிலேயே மானுவல் சன்தோஷ் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

கொலம்பியாவிலுள்ள அரசியல் பின்னணியுடனான குடும்பமொன்றில் 1951 ஆகஸ்ட் 10 ஆம் திகதி சன்தோஷ் பிறந்தார்.

இவரது பாட்டனார் எடுஆள்டோ சன்தோஷ் 1938 முதல் 1942 வரையான காலப்பகுதியில் கொலம்பிய் ஜனாதிபதியாக இருந்துள்ளார்.அத்துடன் எல் ரியேம்போ என்ற பத்திரிகையின் பணிப்பாளராகவும் இருந்துள்ளார்.

இதேவேளை தந்தை என்ரிக் சன்தோஷ் காஸ்ரிலோ அப்பத்திரிகையின் ஆசிரியராக 50 வருடங்களுக்குமேல் கடமையாற்றியுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் பிறந்த சன்தோஷ் பொகோடாவில் ஆரம்ப இடைநிலை கல்வியையும் சன் கார்லஸ் தனியார் பாடசாலையில் உயர்கல்வியையும் பெற்றிருந்தார். அத்துடன் இவரது இறுதி ஆண்டு உயர் கல்வி கர்ராஜேனாவிலுள்ள கடற்படை கல்லுாரியில் கற்க வேண்டியிருந்தது.அங்கேயே அவர் தனது பட்டப்படிப்பை பூர்த்தி செய்தார்.

பின்னர் அமெரிக்காவின் கன்சாஸ் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரம் மற்றும் வர்த்தக நிர்வாக பட்டப்படிப்பை பூர்த்தி செய்து லண்டனின் பொருளாதாரக் கல்லுாரியில் பொருளாதாரம்,பொருளாதார அபிவிருத்தி மற்றும் பொது நிர்வாகம் ஆகிய முதுமாணி பட்டங்களையும் ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் வர்த்தகம் மற்றும் ஊடகவியல் பட்டப் படிப்பு,சட்டம் மற்றும் இராஜதந்திரத்திற்கான பிளேச்சர் கல்லுாரியில் சட்டம் மற்றும் இராஜதந்திரம் பட்ட மேற்படிப்பையும் பூர்த்தி செய்தார்.

தனது கல்வியைத் தொடர்ந்து 1991 ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு வர்த்தக அமைச்சராகவும் பின்னர் 1992 இல் ஐ.நா.வின் வர்த்தக அபிவிருத்தி மாநாட்டுக்கான தலைவராக 4 வருடங்கள் பணிபுரிந்துள்ளார்.

இதேவேளை லத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் பிராந்தியத்திற்கான ஐ.நா.பொருளாதார ஆணைக்குழுவின் தலைவராகவும் பணிபுரிந்தார்.

இந்நிலையில் மாரியா கிளைமென்சியா என்பவரைத் திருமணம் செய்து மூன்று ஆண் குழந்தைகளுக்கு தந்தையானார்.

சமூக தேசிய ஐக்கிய கட்சியினை ஆரம்பித்து முன்னாள் ஜனாதிபதி அல்வாரோ உரிபேக்கு ஆதரவாக செயற்பட்டு அவரது பதவிக்காலத்தில் பாதுகாப்பு அமைச்சராகவும் அதற்கு முன் 2000 ஆகஸ்ட் முதல் 2002 ஆகஸ்ட் வரை நிதி அமைச்சராகவும் பணிபுரிந்தார்.

இந்நிலையில் 2009 மே 18 இல் பாதுகாப்பு அமைச்சினை இராஜிநாமா செய்துவிட்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று தற்பொழுது 2010-2014 காலப்பகுதிக்கான ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.


கொலம்பியாவை பொறுத்தவரையில் அந்நாட்டரசுக்கு பாரிய அச்சுறுத்தலாக உள்ள விடயம் பார்க் போராளிகள்.


அக்குழுவை வெற்றி கொள்வதை இலக்காக கொண்டு செயற்பட்டு நாட்டில் சுமுக நிலைமையை சன்தோஷ் ஏற்படுத்துவாரா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.


**யோ.நிமல்ராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபஞ்ச ரகசியத்தை அறிய முயற்சிக்கும் விஞ்ஞானிகள்

பூமி உள்ளிட்ட கோள்கள்,நட்சத்திரங்கள் ஆகியவை பிரபஞ்சத்தில் எப்படி பிறந்தன என்பது குறித்து அறிந்து கொள்ள உலகில் உள்ள விஞ்ஞானிகள் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.ஆனால் அவர்கள் அறிந்து கொண்டது மிகச் சிறிதளவே. எனவே மேலும் விபரங்களைத் தெரிந்து கொள்ள தொடர்ந்து ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன.



இதன் ஒரு பகுதியாக அணுவை மோதவிட்டு பிரபஞ்சம் தோன்றிய ரகசியத்தை அறியும் மிகப்பெரிய முயற்சியில் அமெரிக்கா, ரஷ்யா, சுவிற்சர்லாந்து,ஜப்பான் நாட்டு விஞ்ஞானிகள் ஈடுபட்டனர்.இவர்களுக்கு உதவியாக இந்தியா,கனடா,சீனா உள்ளிட்ட விஞ்ஞானிகளும் பணியாற்றினர்.இதற்காக சுவிற்சர்லாந்தில் ஜெனீவா நகருக்கு வெளியே 45 ஆயிரம் கோடி ரூபா செலவில் 'செர்ன்" என்ற இயற்பியல் சோதனைக்கூடம் அமைக்கப்பட்டது.அமெரிக்காவில் சிக்காகோ நகருக்கு அருகேயும் இதே போன்று சிறியளவில் 'டெவட்ரான்' என்ற இயற்பியல் சோதனைக்கூடம் அமைக்கப்பட்டது.சோதனைக்கூடத்தில் அணு உற்பத்தி செய்யும் இயந்திரம் மிகுந்த பாதுகாப்புடன் வைத்து உற்பத்தி செய்யப்பட்ட அணுக்கள் பலமுறை சுற்றி அதிக திசை வேகத்துடன் ஒன்றின் மீது ஒன்று மோதும்படி செய்து ஏற்படும் விளைவுகள் குறித்து அறிந்து கொள்வதால் பிரபஞ்சம் எப்படி தோன்றியது என்ற இரகசியம் வெளிவரும் என்று விஞ்ஞானிகள் கருதினர்.

சுவிஸ்,பிரான்ஸ் எல்லையில் பூமிக்கடியில் 'ஜீரோ' டிகிரி வெப்பநிலையில் சுரங்க அமைப்பில் கட்டப்பட்ட பரிசோதனைக் கூடத்தில் முதல் வெடிப்பு நடத்தப்பட்டது.27 கி.மீ.தூரத்தில் வைக்கப்பட்டிருந்த இரண்டு முனைகளிலிருந்து மின்காந்த விசையின் மூலம் சுழற்றி அனுப்பப்பட்ட புரோட்டான்கள் மிக வேகமாக வந்து மோதின.அப்போது மனிதனால் உருவாக்கப்பட்ட மிகச் சிறிய அணுவிலிருந்து 7 டிரில்லியன் 'எலக்ட்ரான் வோல்ட்' ஆற்றல் ஏற்பட்டது. 'செரன்' அமைப்பின் தலைவர் ரால்ப்ஹியூர் கூறுகையில், பிரபஞ்சம் எப்படி உண்டானது என்பது குறித்துக் கண்டறிவதில் விஞ்ஞானிகள் சிறிதளவு முன்னேற்றம் அடைந்துள்ளனர்.இது பாராட்ட வேண்டிய மகிழ்ச்சியான செய்தி.

இங்கு அமைக்கப்பட்டுள்ள இயந்திரம் விண்வெளி ஆய்வில் புதிய சகாப்தத்தை தோற்றுவித்துள்ளது.மேலும் இரண்டு வித்தியாசமான அணுக்கள் மோதும் போது தோன்றும் அதிக சக்தியை அறிந்து கொள்ள தற்போது உள்ளதை விட நவீன இயற்பியல் சோதனைக்கூடம் தேவை.சமீபத்தில் நடந்த சோதனைகள் மற்றும் அதன் விளைவுகள் குறித்து 'செரன்' தலைவர் ரால்ப்ஹியூர் வெளியிட்ட முடிவுகளை பாரிஸ் நகரில் நடந்த 'இயற்பியல் உயர் சக்தி' என்ற சர்வதேச மாநாட்டில் குழுமியிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட இயற்பியல் விஞ்ஞானிகள் அறிந்து கொண்டனர்.

தற்போதுள்ள சாதனங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் மூலம் செய்த சோதனையில் பிரபஞ்சம் எப்படி உண்டானது என்பது குறித்து ஓரளவிற்கு தெரிந்து கொள்ள முடிகிறது.ஆயிரத்து 400 கோடி ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட பெரு வெடிப்பு காரணமாக பிரபஞ்சம் பிறந்தது என்பதை கொள்கையளவில் விஞ்ஞானிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.அடுத்ததாக 57 ஆயிரத்து 825 கோடி இந்திய ரூபா செலவில் 50 மைல் நீளத்திற்கு சர்வதேச இயற்பியல் கூடம் அமைத்து சோதனைகள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.இந்த சோதனை சர்வதேச ஒத்துழைப்புடன் செய்யப்படும்.

'செரன்' சோதனைக்கூடத்தின் நோக்கம் உயர் சக்தி குறித்த ஆய்வு.ஆனால் ஹம்பர்க்கில் துவக்கப்படவுள்ள சர்வதேச பரிசோதனைக் கூடம் அதிக தொழில்நுட்பம் கொண்டதாக இருக்கும்' என்றார்.

'கடந்த 2008 ஆம் ஆண்டு செப்டம்பரில் அணுக்கள் மோதும் சோதனை செய்ய முடிவு செய்யப்பட்டது. ஆனால் சில பிரச்சினைகள் ஏற்பட்டதால் அது நவம்பர் மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டது. பின் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.அது முதல் வெற்றிதான் தொடர்கிறது.முன்பு புரோட்டான்களுக்கிடையே மோதல் ஏற்பட வைத்து சோதனை செய்யப்பட்டது.ஆனால் சர்வதேச பரிசோதனைக் கூடத்தில் இனி நடைபெறவுள்ள சோதனையின் போது எலக்ட்ரான் மற்றும் பாசிட்ரான் எதிரெதிரானவைகளை மோதவிட்டு நடைபெறும் விளைவுகள் குறித்து ஆய்வு செய்யப்படும்' என்கிறார்,அணு இயற்பியல் அறிஞரான கே.வார்ம்செர்.




# மேற்கத்திய வாழ்க்கை முறையே மார்பக புற்றுநோய்க்கு காரணமாம்

அதிகமாகச் சாப்பிடுதல், அதிக உடலுக்குக் கெடுதல் விளைவிக்கக்கூடிய பானங்களை அருந்துதல், மிக குறைவான உடற்பயிற்சி போன்ற மேற்கத்திய வாழ்க்கை முறைகளாலேயே பிரித்தானியாவில் இருக்கும் பெண்களுக்கு அதிக அளவில் மார்பகப் புற்றுநோய் உருவாவதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

கிழக்கு ஆப்பிரிக்காவில் தான் மார்பகப்புற்றுநோய் வீதம் மிக குறைவு. அதனோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் பிரித்தானியாவில் உள்ள பெண்களுக்கு மார்பகப்புற்றுநோய் 4 மடங்கு அதிகமாக உள்ளது அதிர்ச்சியளிப்பதாக உள்ளதாகவும் கூறியுள்ளனர்.

அதேபோன்று தென் அமெரிக்கா மற்றும் ஆசியாவின் சில பகுதிகளிலும் மார்பகப் புற்றுநோய் வீதம் குறைவாக இருப்பதை சுட்டிக்காட்டியுள்ள நிபுணர்கள் இதிலிருந்து மேற்கத்திய வாழ்க்கை முறையை மாற்றிக்கொண்டால் உறுதியாக ஆபத்து விழுக்காட்டை குறைக்க முடியும் எனக் கூறுகின்றனர்.

இது குறித்து நடத்திய மதிப்பீடுகளில் அதிக வருமானம் உள்ள நாடான பிரித்தானியாவில் 100,000 பெண்களை எடுத்துக்கொண்டால் 87.9 பேருக்கு மார்பகப் புற்றுநோய் இருப்பது உறுதியாகி உள்ளது. அதே நேரத்தில் கென்யா, தன்சானியா ஆகிய குறைவான வருமானம் உள்ள நாடுகளில் இதே 100,000 பெண்களில் 19.3 பேருக்கு மட்டுமே மார்பகப் புற்றுநோய் உள்ளது.

மார்பகப் புற்றுநோயில் பெல்ஜியம் முதலிடத்தையும் பிரான்ஸ் இரண்டாமிடத்தையும் பிடித்துள்ளது. மொத்தத்தில் அல்கஹோல் கலந்த பானங்களை அருந்தும் பெண்களுக்கே மார்பகப் புற்றுநோய்க்கான சாத்தியக் கூறுகள் அதிகமிருப்பதால் மேற்கத்திய வாழ்க்கை முறையை விட்டொழித்து விடுமாறு பெண்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

# மன அழுத்தம் போக்க விஞ்ஞானிகள் புது யோசனை

எவ்வளவுதான் வேலைச்சுமை, கஷ்ட நஷ்டங்கள் இருந்தாலும் தன்னம்பிக்கையுடன் கடவுள் நம்பிக்கையும் இருந்தால் மன அழுத்தத்தில் இருந்து விரைவில் விடுபடலாம் என அமெரிக்க விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.



மன அழுத்தத்தில் இருந்து விடுபடும் வழிகள் பற்றி கனடாவில் டொரன்டோ நகரில் உள்ள ஸ்கார்பெரோ பல்கலைக் கழக விஞ்ஞானிகள் சமீபத்தில் ஒரு ஆராய்ச்சி மேற்கொண்டனர்.

முதல் கட்டமாக இவர்களிடம் பல சோதனைகள் நடத்தப்பட்டன. ஆய்வு முடிவுகள் பற்றி ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்த விபரம் வருமாறு:

தவறு செய்தவர்கள், தவறு செய்யாதவர்கள் என்று இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டு ஆய்வு நடந்தது. இரு தரப்பினரது மூளையின் செயல்பாடுகளும் ஆராயப்பட்டன. தவறு செய்யாதவர்களுக்கு கடவுள் நம்பிக்கை அதிகம் இருந்தது. இதுவே தங்களை நல்லபடியாக வழிநடத்தும் என்ற நம்பிக்கையும் அவர்களிடம் அதிகம் இருந்தது.

அவர்களது வெற்றிக்கு இந்த நம்பிக்கையே காரணமாக இருக்கிறது. அதிக தவறுகள் செய்கிறவர்களிடம் தன்னம்பிக்கையின்மை, பயம் போன்ற எதிர்மறை எண்ணங்கள் இருக்கின்றன. தன்னம்பிக்கையுடன் கடவுள் நம்பிக்கையும் இருந்தால் மன அழுத்தத்தில் இருந்து விடுபடலாம். மன அழுத்தம் கணிசமாக் குறையும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Saturday மெயில் சிறுகதை

# அன்பால் வென்றாய்...

சசி, கொழும்பு

கா 'லமிது..காலமிது கண்ணுறங்கு மகளே' பழைய பாடல் வரிகள் காற்றில் மிதந்து வந்தன.பங்கஜம் நிலத்தில் அமர்ந்து தனது பேத்தியின் மகளான ஹரிதாவை தூங்க வைத்துக்கொண்டிருப்பதை ஹரிதாவின் தாய் ஜனனி பார்த்து ரசித்துக் கொண்டாள்.அந்தப் பாடல் வரிகள் தனது அம்மம்மா பங்கஜத்திற்கு மிக பொருந்துவதாக அவளுக்குப்பட்டது.ஜனனிக்கு சிறு வயதிலிருந்தே அம்மம்மாவுடன் ஈடுபாடு அதிகம். அதனால் அவளுக்கு அம்மம்மாவின் வாழ்க்கை அனுபவங்கள் அனைத்தும் நன்கு தெரிந்தே இருந்தன.



மலையகத்தை பிறப்பிடமாக கொண்டவள் பங்கஜம்.நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த அவள் 20 வயதிலேயே தனசேகரின் கூட்டுக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டதிலிருந்து அவளுடைய பொறுப்புகளும் கடமைகளும் ஆரம்பித்துவிட்டன.கணவரின் மூன்று தங்கைகளையும் மணம் முடித்து கொடுப்பது,அவர்களுக்கான கடமைகளை செய்வது,தனசேகர் பெற்றோருக்கு குடும்ப நிர்வாகத்தில் உதவுவது எதிலும் அவள் பின்நிற்கவில்லை.

இதனிடையே ஜனனியின் அம்மா,மாமன்மார்கள் இருவர் ஆகிய மூவரும் பிறந்து வளர்ந்து படித்து பெரியவர்களாகிவிட்டார்கள்.தனசேகரின் பெற்றோரும் மறைந்து விட்டார்கள்.ஜனனியின் மாமாமார் இருவரும் படித்து முடித்தும் ஐரோப்பாவில் வேலை தேடிச் சென்றார்கள்.ஜனனியின் தாய் கனகசபையை மணம் முடித்து சிறப்பாக வாழ தொடங்கி விட்டாள்.ஜனனிக்கு 10 வயதாகும்போது அவள் தாத்தாவும் மறைந்து விடவே அம்மம்மா ஜனனியின் வீட்டுக்கே வந்துவிட்டாள்.அன்றிலிருந்து ஜனனியின் தேவைகள் அனைத்தும் அம்மம்மாவாலேயே நிறைவேற்றப்பட்டன.

அம்மம்மா ஓய்ந்திருந்து சோர்ந்திருந்து அவள் பார்த்ததில்லை. அவளின் சமையல் கைபக்குவமும் பரிமாறும் அன்பும் குடும்ப உறுப்பினர்களின் மீதுள்ள அக்கறையும் அவள் மனதில் அம்மம்மாவை உயர்ந்த இடத்திற்கு இட்டுச் சென்றது.ஜனனியும் தனது பாடசாலைக்கல்வியை முடித்து பல்கலைக் கழகம் தெரிவாகி அங்கு படிக்கும் காலத்தில் சஜிவை விரும்ப இருவரின் பட்டப்படிப்பின் பின் அவர்களின் திருமணம் பெற்றோர் ஆசிர்வாதத்துடன் சிறப்பாக நடந்தேறியது.ஜனனி திருமணத்தின்போதும் சரி அவள் குழந்தைப் பேற்றுக்காக தாய்வீடு வந்த போதும் சரி அனைத்து வேலைகளையும் இழுத்துப் போட்டுக்கொண்டு அம்மம்மாவே செய்தாள்.

இதோ குழந்தை ஹரிதாவிற்கு மூன்று மாதங்கள் முடிந்து விட்டன.ஜனனி தற்போது புக்ககம் செல்ல தயாராகிவிட்டாள்.இப்போதும் குழந்தையின் அனைத்து தேவைகளும் அம்மம்மாவாலேயே நிறைவேற்றப்பட்டன.ஜனனிக்கு அம்மம்மாவை நினைக்கும்போது கண்கள் பனித்தன.எப்போதும் தனது பெற்றோரை பிரிந்து செல்வதைவிட அம்மம்மாவை பிரியவே அவள் சிரமப்படுவாள்.இம்முறையும் அவள் புகுந்த வீட்டுக்கு செல்வதை அம்மம்மாவாலேயே தள்ளிப்போட்டு வந்தாள்.அம்மம்மா இல்லாத இந்த வீட்டை அவளால் கற்பனையாலும் நினைக்க முடியவில்லை.தனது அம்மம்மாவை போல் எத்தனையோ பெண்கள் தன்பெருமை உணராமலே தங்கள் குடும்பத்திற்காக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கவும் அவள் உள்ளம் நெகிழ்ந்தது.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு [illegible]




## என்னவளே...

நீ என்னிடம் நிறைய
பொய் சொல்கிறாய்
அந்தப் பொய்கள்
எனக்கு
பிடிக்கவில்லை-
ஆனாலும்
உன் வார்த்தைகள்
எனக்குப் பிடிக்கிறது-
உன்
அழகு எனக்குப் பிடிக்க
வில்லை
அந்த அழகான முகம்
என்னை விட்டு விலக
மறுக்கின்ற நொடி-உன்
அழகான முகம்
பிடிக்கிறது.
உன்னை மறக்கிற
அந்த நிமிடம்-உன்
நினைவுகள் தொடருவது
பிடிக்கவில்லை-
ஆனால்
அந்த நினைவுகளில்
வாழ்வது பிடிக்கிறது.
உன்னுடன் பேசப்
பிடிக்கவில்லை-ஆனால்
உன் குரலைக்
கேட்கப் பிடிக்கிறது.
உன்னைக் காதலிக்க
பிடிக்கவில்லை-
ஆனாலும்
உன்னுடன் சேர்ந்து
வாழப் பிடிக்கிறது.

**மகாலக்ஷ்மி ஜெகதீஸ்வரன், மூளாய்.**

## அகதி

வாழ்வின் சுமைகளோடு
ரணங்களின் வலிகளோடு
நகரும் அகதியின் வாழ்வு

என்ற பெயர் போய்
அகதி என்ற நிலை கொண்டு
சிதறும் நடை பிணங்களாய்

தமிழன் எனின் தாழ்வானதா?
தர்க்கம் புரிகையில்
தவறும் நியாயங்கள்

அகதியின் கண்ணீர்
நாளை காவியத்தில்
அதுவரை பொறுத்திரு,காத்திரு விடிய
லுக்காய்

**தர்சிகா குணரத்தினம், கொற்றாவத்தை.**

## பிரசவிக்கப்படாத என் காதல்...!

பத்துமாதங்களல்ல....
பத்து வருடங்களாகியும்

பிரசவிக்கப்படாத என் காதல்
அவள் மனக் கருவறைக்குள்
கிடக்கின்றது!

பத்து நாட்கள்...பத்து வாரங்கள்....
பத்து மாதங்கள்....பத்து வருடங்கள்...
எனக் கனிசமான காத்திருப்புக்களை
என் வாழ்க்கை
ஏற்றுக் கொண்டு விட்டது!

இன்னும்
பத்து யுகங்கள் ஆனாலும்
வரண்டு போன பூமியின் மேல்
வற்றாமல் ஒரு துளி நீர்
உயிர் வாழ்வது போல்
அவளுக்காகக்
காத்திருப்பேன்!
இக்காத்திருப்பு எனக்கு
இதமான சுகம் தருகின்றது!

**சுதந்திரன்**

## மன்னிப்பு

வாழ்வின் கதவு
சாத்தப்பட்டாலும்
சிறு ஜன்னலாவது
திறந்திருக்கும்
நிறுத்தாதே உன்
முயற்சியை

மூச்சுத் திணறும் வகை
யில்
வில்லங்கம் வந்து
போகட்டுமே!
உனக்கென்ன?

கவலைகளை கசக்கி
பிழிந்து காய விடு
பூமியின்
மணல் மேடுகளில்
அஹிம்சையை
உதாசீனப்படுத்தாமல்
உடுத்துக் கொண்டிரு
ஆயுளின்
தொலைவு வரை
கடந்து போன
இரவுகளை கண்ணீரால்
கழுவிவிடு
உனக்கான
சிலுவைகளை
யாரும்
நட்டு வைத்தாலும்
அவர்களுக்கு
மன்னிப்பை
உன்னிதயத்தில்
பொறித்து வை

**சா.ரமேஸ்குமார், மீசாலை கிழக்கு.**

## பெண்ணே உன்னை...!

பெண்ணே உன்னை
நிலவென்று சொல்ல மாட்டேன்...
உன்னை நான்...
தினமும் ஸ்பரிசிப்பதால்...

பெண்ணே உன்னை...
அழகென்று சொல்ல மாட்டேன்
உன்னழகிற்கு...
அழகின் அளவு குறைவு
என்பதால்...!

பெண்ணே உன்னை
தென்றல் என்று சொல்லமாட்டேன்
சில நேரம்...
நீ புயலாவதால்...!

பெண்ணே உன்னை
என் தாயென்று சொல்லமாட்டேன்...
இன்னும் என்னை...
நீ சுமப்பதால்...!

**ந.ஜனார்த்தன், ஹொப்டன்.**

## ஏன்...?

வைகறைப் பொழுதில்
காலைக் கதிரவனாய்;
மலர்ந்த நம்
கலாசாலை நட்பு

கடிகார முட்களாய்
மெது; மெதுவாய்;
முன் நகர்ந்து;
காதலெனும்
எல்லை தொட்டு;
கரம் கோர்த்த
எம் உறவு.

கலாசாலை முடிவோடு
நாம் கண்ட கனவுகள்;
சுழல் காற்றில் சிக்கிய
வெண்முகிலாய்;
வேக வேகமாய்;
ஓடிச் சென்று.

அடிவானம் தொடும்
மாலைக் கதிரவனாய்;
மறைந்து போனதும்
ஏனோ?

**'கற்பிட்டி வஹாப்'**

## அரவணைப்புக்கு ஒரு படைப்பு!

அறிவியல் தான்
ஆம்ஸ்ட்ரோங்கை
நிலவுக்கு அழைத்தது!

துணிவு தான்
வீரர்களை சிகரத்துக்கு
அழைத்தது!

பயிற்சி தான்
மீனவர்களை
முத்தெடுக்க
அழைத்தது!

தவம் தான்
முனிவர்களை
சொர்க்கத்துக்கு
அழைத்தது!

ஆனால்...
'சற்றர்டே மெயிலே
உன் பாரபட்சம் அற்ற
அரவணைப்புதான்
என்னை
கவி எழுத வைத்தது'

**கே.எம்.சம்ஸ், பரகடுவ.**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
**Saturday மெயில்**
**இல. 68, எலி ஹவுஸ் வீதி,**
**கொழும்பு-15**
என்ற முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...

## மணமகன்

பெண்ணை வாழ வைக்க
அவளிடம் பணம் வாங்கி
அவளுக்கு தாலி கட்டும்
அறிவுள்ள உத்தமன்

**சுபா, மானிப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்து மதத்துக்கு மாறிய பிரபல ஹொலிவூட் நடிகை

ஹொலிவூட்டின் பிரபல நடிகை ஜூலியா ராபர்ட்ஸ்(42 வயது) இந்து மதத்துக்கு மாறிவிட்டார். கோவிலுக்குச் சென்று பிரார்த்தனை செய்கிறார். அடுத்த பிறவியிலாவது நான் நிம்மதியாக இருக்கவேண்டும் என மனமுருகிக் கூறியுள்ளார்.

ஒஸ்கர் விருது பெற்ற ஹொலிவூட் நடிகையான ஜூலியாராபர்ட்சின் பெற்றோர் புரட்டஸ்தாந்து மற்றும் கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள்.ஜூலியா பிறந்ததோ கிறிஸ்தவ நாடான ஜோர்ஜியாவில்.

ஆனால், அவர் இப்போது இந்து மதத்துக்குரிய சடங்குகளை கடைப்பிடிக்கிறார். அவர் நடித்து வரும் 'ஈட், பிரே அண்ட் லவ்' என்ற படத்தின் கதைப்படி நாயகி விவாகரத்து பெற்றவள். உணவுக்காக இத்தாலிக்கும் ஆன்மிகத்துக்காக இந்தியாவுக்கும் அன்புக்காக இந்தோனேசியாவிலுள்ள பாலித் தீவுக்கும் செல்கிறாள்.

இப்படத்தின் படப்பிடிப்பு கடந்த ஆண்டு இந்தியாவின் அரியானாவிலுள்ள பட்டோடி என்ற இடத்தில் நடந்தது. அங்கு ஹரி மந்திர் என்ற கோவிலின் சுவாமி தர்மதேவ் என்ற துறவியைச் சந்தித்து ஆசி பெற்றார் ஜூலியா.மேலும் தன்னுடைய குழந்தைகளின் பெயர்களையும் இந்துப் பெயர்களாக மாற்றிக்கொண்டார். அப்போதே அது பரபரப்பான செய்தியாக பேசப்பட்டது.இதையடுத்து இப்போது அவர் இந்து மதத்துக்கு முழுமையாக மாறிவிட்டார். அடிக்கடி கோவிலுக்குச் சென்று பிரார்த்தனையில் ஈடுபடுகிறார். இதுகுறித்து அவர் கூறுகையில்; நான் என் குடும்பத்தாலும் நண்பர்களாலும் வஞ்சிக்கப்பட்டேன். அடுத்த பிறவியிலாவது நான் அமைதியுடனும் நல்ல ஆதரவுடனும் வாழ வேண்டும் என்றார்.

ஜூலியாவின் இந்த மாற்றம் பற்றி சுவாமி தர்மதேவ் கூறியதாவது;படப்பிடிப்பு நடந்த இடத்தில் ஒரு கோவில் அரங்கு போடப்பட்டிருந்தது.அங்கு பக்தர்கள் சிலர் தீபம் ஏற்றி பத்திகள் கொளுத்தி வைத்து வழிபட்டனர். ஜூலியாவும் அங்கு சென்று தீபத்தைக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்.நான் அவரது கையில் சிவப்புக்கயிறு கட்டிவிட்டேன். அவரது நெற்றியில் திலகமிட்டேன். மேலும் அவர் தனது தனிச் செயலர் மூலம் நோய்வாய்ப்பட்டுள்ள தாயின் உடல்நலம் தேறுவதற்காக பிரார்த்தனை செய்யும்படி என்னிடம் கேட்டுக்கொண்டார்.அவர் புறப்படும் முன் நான் அவரிடம் நீங்கள் உணவு அல்லது அன்பு இரண்டையும் தேர்வு செய்யாவிடிலும் பிரார்த்தனை செய்ய மறந்து விடாதீர்கள். அது உங்கள் வாழ்வின் ஓர் அங்கமாக இருக்கட்டும் என- சொன்னேன். அவரும் புன்னகையுடன் அதை ஏற்றுக் கொண்டார். இவ்வாறு தர்ம தேவ் தெரிவித்தார்.

அமெரிக்காவிலுள்ள இந்து சர்வதேச சங்கத்தின் தலைவர் ராஜன் சேத், ஜூலியாவின் முடிவை வரவேற்றுள்ளார். ஜூலியின் இம் முடிவு இணையத் தளங்களில் சூடாக விவாதிக்கப்படுகிறது. அவரை ஆதரிப்பவர்களைப் போலவே அவரை எதிர்ப்பவர்களும் உள்ளனர்.

# இந்தியாவின் இன்றைய நிலை

1.அரிசியின் விலை கிலோ 44 ரூபா. ஆனால், சிம்கார்ட் இலவசமாகக் கிடைக்கிறது.

2.பொதுவிநியோகத்தில் விற்கப்படும் அரிசியின் விலை கிலோ ஒரு ரூபா. ஆனால், பொதுக்கழிப்பறையின் கட்டணம் மூன்று ரூபா.

3.வங்கிகளில் வாகனக் கடன்களுக்கான வட்டி ஐந்து சதவிகிதம். ஆனால்,கல்விக் கடனுக்கான வட்டி 12 சதவிகிதம்.

4.பிஸ்ஸா வீட்டிற்கு வந்து சேரும் வேகத்தில் பாதியளவு வேகத்தில்கூட அதாவது பாதி நேரத்தில் கூட அம்புலன்ஸும் தீயணைப்பு வாகனங்களும் வந்து சேர்வதில்லை.

5.ஒரு கிரிக்கெட் குழுவையே கோடிக்கணக்கான பணத்தைக் கொடுத்து விலைக்கு வாங்கக் கூடிய செல்வந்தர்கள் இருக்கிறார்கள். அதே பணத்தில் பத்தில் ஒரு பங்கைக்கூட அறப்பணிகளுக்குச் செலவு செய்யக்கூடிய செல்வந்தர்கள் மட்டும் இல்லை.

6.நாம் அணியும் உள்ளாடைகளும் ஆடைகளும் காலணிகளும் குளிரூட்டப்பட்ட கடைகளில் விற்கப்படுகின்றன. ஆனால், நாம் உண்ணும் காய்கறிகளும் பழங்களும் நடைபாதைக் கடைகளில் விற்கப்படுகின்றன.

7.நாம் குடிக்கும் லெமன் ஜூஸ்கள் செயற்கையான இரசாயனப் பொருட்களால் தயாரிக்கப்படுகின்றன. பாத்திரம் கழுவ உதவும் நீர்க்கலவை இயற்கையான லெமனின் [எலுமிச்சையில்] தயாரிக்கப்படுகிறது.

8. மொத்தமாகப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் நடத்த வேண்டிய அரசு, சாராயம் விற்றுக் கொண்டிருக்கிறது. சாராயம் விற்றுக்கொண்டிருந்த பலர் இன்று கல்லூரிகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

9.கோதுமைக்கு வரியில்லை. அது விளைபொருள்.கோதுமையை மாவாகத் திரித்தால் வரியுண்டு. கோதுமை மாவை சப்பாத்தியாக செய்து விற்றால் வரியில்லை. அதேமாவை பிஸ்கட்,கேக்,பாணாகச் செய்து விற்றால் வரி உண்டு.

10.பிரபலமாக வேண்டும் என்ற அபிலாசைகள் அனைவருக்கும் உண்டு. ஆனால், பிரபலமாவதற்குரிய உண்மையான வழியில் செல்ல மட்டும் ஒருவருக்கும் விருப்பம் இல்லை.

11.குழந்தைத் தொழிலாளர்களை ஒழிக்க வேண்டும் என்போம். ஆனால், தேநீர்க் கடைகளில் வேலை பார்க்கும் சிறுவர்கள் கொண்டு வந்து கொடுக்கும் தேநீரை மட்டும் சுவாரசியமாக உறிஞ்சிக் குடிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகுதிச் சுற்றிலேயே தள்ளாட்டம்



உலகின் ஒட்டுமொத்தக் கவனத்தை ஒரு மாத காலம் ஈர்த்த உலகக் கிண்ண கால்பந்து போட்டி அண்மையில் நிறைவடைந்தது. சுமார் 4.5 கோடி மக்கள் தொகையைக் கொண்ட ஐரோப்பா கண்டத்தில் உள்ள சிறிய நாடான ஸ்பெயின் சாம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்தது.

1920 ஆம் ஆண்டு கால்பந்து விளையாட ஆரம்பித்த ஸ்பெயின் 1934 ஆம் ஆண்டு முதன்முறையாக உலகக் கிண்ணப்போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது. அதன்பிறகு 10 உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்கேற்ற ஸ்பெயினால் கிண்ணத்தை வெல்லமுடியவில்லை.

இருப்பினும் தொடர்ந்து முயற்சித்த ஸ்பெயின் 2010 உலகக் கிண்ணப் போட்டியில் சாம்பியன் ஆனது. உலகக் கிண்ணத்தில் பங்கேற்க ஆரம்பித்து 75 ஆண்டுகள் கழித்து கிண்ணத்தை வென்று நீண்ட காலக் கனவை நனவாக்கியுள்ளது.

உலகக் கிண்ணப் போட்டியில் முதல் ஆட்டத்தை தோல்வியில் தொடங்கினாலும் இறுதி ஆட்டத்தை வெற்றியில் முடித்து சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது ஸ்பெயின். முதல் ஆட்டத்தில் சுவிற்சர்லாந்திடம் தோற்றபோது ஸ்பெயின் ரசிகர்களின் விமர்சனத்துக்குள்ளானார் கப்டனும் கோல் காப்பாளருமான இகர் காஸில்லஸ்.

அதன்பிறகு நடைபெற்ற எல்லா போட்டிகளிலும் தொடர் வெற்றியைப் பதிவு செய்தது ஸ்பெயின். பெரியளவில் கோல்களை அடிக்காவிட்டாலும் எதிரணிகளை கோலடிக்கவிடாமல் பார்த்துக் கொண்டது தான் ஸ்பெயினுடைய வெற்றியின் ரகசியம்.



உலகக் கிண்ண லீக் சுற்றில் சிலிக்கு எதிரான போட்டியைத் தவிர மற்ற அனைத்து போட்டிகளிலும் ஒரு கோல் மட்டுமே அடித்து வெற்றிபெற்றது ஸ்பெயின். முதலில் விமர்சனத்துக்குள்ளான கப்டன் காஸில்லஸ் கிண்ணத்தை கைப்பற்றி ரசிகர்களின் பாராட்டைப்பெற்றார். அவரின் கடும் போராட்டத்துக்குக் கிடைத்தது தான் சிறந்த கோல் காப்பாளருக்கான 'கோல்டன் குளோவ்' விருது

உலகக் கிண்ணச் சாம்பியனாகி உலகின் கவனத்தை ஈர்த்துள்ள ஸ்பெயினுக்கு பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவிக்காமல் இருக்க முடியாது. ஸ்பெயினை பாராட்டும் அதேநேரத்தில் கால்பந்து விளையாட்டில் இந்தியாவின் நிலையை நினைத்தால் சிரிப்பைத் தவிர வேறு வழியில்லை.

உலகின் மூலை முடுக்குகளில் ஒளிந்திருக்கும் நாடுகள் எல்லாம் உலகக்கிண்ணகால்பந்தில் ஜொலிக்கின்றன. ஆனால், உலகின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட நாடு என உலக அரங்கில் உயர்ந்து நிற்கும் இந்தியாவோ தகுதிச் சுற்றிலேயே தள்ளாடுகிறது. கால்பந்து விளையாட ஆரம்பித்து 60 ஆண்டுகளைக் கடந்தபோதும் ஒரு முறை கூட உலகக் கிண்ணத்தில் பங்கேற்றதில்லை என்பது வேதனைக்குரியது.

1948 ஆம் ஆண்டு முதல் கால்பந்து விளையாடிவரும் இந்திய அணி 1950 ஆம் ஆண்டு உலகக் கிண்ண தகுதிச் சுற்றில் முதன் முறையாக விளையாடத் தகுதி பெற்றது. ஆனால் காலணி (ஷூ) இல்லாமல் விளையாடுவதற்கு சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிபா) தடைவிதித்தாலும் பிரேசிலுக்கு செல்வதற்கான பயணச் செலவுகள் அதிகம் என்பதாலும் இந்தியா உலகக் கிண்ணத்தில் பங்கேற்கவில்லை.

1954 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் இந்தியா விளையாட பிபா தடைவிதித்தது. அதன்பிறகு 1958 முதல் 1982 வரை இந்தியா போட்டிகளில் பங்கேற்கவில்லை. 1986 முதல் 2010 வரை 24 ஆண்டுகளாகப் பங்கேற்று வரும் இந்திய கால்பந்து அணியால் உலகக் கிண்ணத்தில் விளையாடத் தகுதிபெற முடியவில்லை.

2010 உலகக் கிண்ண தகுதிச் சுற்றில் உலகின் அனைத்துக் கண்டங்களிலிருந்தும் 205 நாடுகள் பங்கேற்றன. ஆசியக் கண்டத்திலிருந்து இந்தியா உட்பட 43 நாடுகள் பங்கேற்றன.



உலகக் கிண்ண போட்டியில் விளையாடுவதற்கு தகுதி பெற்ற 32 அணிகளில் ஆசியக் கண்டத்தைச் சேர்ந்தவை ஜப்பான், வட கொரியா, தென்கொரியா அணிகள் மட்டுமே.

இந்திய கால்பந்து அணியில் இப்போதைய கப்டன் பாய்ச்சுங் பூட்டியாவைத் தவிர மற்ற வீரர்கள் யார் என்றே இந்திய மக்களுக்கு தெரியாத நிலை தான் உள்ளது. உலகக் கிண்ணத்தில்தான் இப்படி என்றால் ஆசியக் கிண்ணத்திலோ அதைவிட மோசம்.

1960 முதல் பங்கேற்று வரும் இந்திய அணி 1964, 1984 ஆம் ஆண்டுகளில் மட்டுமே விளையாடத் தகுதி பெற்றது. 1964 இல் இரண்டாம் இடத்தைப் பெற்ற இந்திய அணி 1984 இல் முதல் சுற்றிலேயே வெளியேறியது.

உலகின் குட்டிநாடுகள் எல்லாம் உலகக் கிண்ணத்தில் ஜொலிக்கின்றன. இந்தியாவோ அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. கால்பந்து போன்ற விளையாட்டுகளில் வீரர்களை உருவாக்க தரமான ஆடுகளங்கள், பயிற்சியாளர்கள் அவசியம். ஆனால் அவை இரண்டுமே இந்தியாவில் இல்லை என்பது மிகப்பெரிய குறை.




இந்திய விளையாட்டு அமைப்புகளின் தலைவர்களோ விளையாட்டைப் பற்றியோ வீரர்களைப்பற்றியோ மைதானங்கள் பற்றியோ கண்டுகொண்டதாகவோ, கவலைப்பட்டதாகவோ தெரியவில்லை. தலைவர் பதவியைத் தக்க வைத்துக்கொள்ளப் போராடும் விளையாட்டு அமைப்புகளின் தலைவர்களுக்கு விளையாட்டைப் பற்றிச் சிந்திக்க நேரம் ஏது?

விளையாட்டு அமைப்புகளும் பயிற்சியாளர்களும் கவனம் செலுத்தாத வரை கால்பந்தாட்டத்தில் கிண்ணம் என்பது இந்தியாவுக்கு கானல்நீர்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொமன்வெல்த் போட்டிக்கு டெங்காலும் மிரட்டல்

பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான (கொமன் வெல்த்) விளையாட்டுப் போட்டிகள் இந்தியத் தலைநகர் டில்லியில் அக்டோபர் 3 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை நடைபெறுகிறது. போட்டிக்கான ஏற்பாடுகளில் பல்வேறு மட்டங்களில் பெரும் ஊழல் நடத்தியிருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில், அது பற்றி ஒரு பக்கம் விசாரணை நடந்துகொண்டிருக்கிறது.

இந்த நிலையில் போட்டிக்கு டெங்கு காய்ச்சலும் ஒரு அச்சுறுத்தலாக வந்திருக்கிறது. டெல்லியில் தற்போது டெங்குக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது. கடந்த இரு நாட்களில் மட்டும் 17 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். மொத்தத்தில் 157 பேர் இந்நோய்க்கு தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

வழக்கமாக டில்லியில் மழைகாலம் அக்டோபர் மாதம் வரை இருக்கும். எனவே அக்டோபர் மாதம் இறுதிவரை டெங்குக் காய்ச்சல் பாதிப்பு தொடர்ந்து அதிகரிக்கும் என்று டில்லி மாநகராட்சி சுகாதார அதிகாரி என்.கே.யாதவ் தெரிவித்துள்ளார்.



இந்தக் காலகட்டத்தில் கொமன் வெல்த் போட்டி நடக்க இருப்பதால் வீர, வீராங்கனைகளுக்கும் டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் உள்ளது.

'கொமன்வெல்த் போட்டிக்காக டில்லி மிகவும் கண்காணிக்கப்பட்டு வருவதால், டெங்கு விவகாரம் வழக்கத்திற்கு மாறாக பெரியதாக தெரியும். டெங்குவை கட்டுப்படுத்த அனைத்து விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றை பரப்பும் கொசுக்களை ஒழிப்பது எப்படி? என்பது பற்றிய விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களை வீடு வீடாக விநியோகத்து வருகிறோம்' என்றும் என்.கே.யாதவ் கூறினார்.

# 'கப்டன் சச்சின் கைகொடுப்பார்'

சாம்பியன்ஸ் லீக் 'ருவென்ரி-20" தொடரில் மும்பை அணியின் வெற்றிக் கப்டன் சச்சின் கைகொடுப்பார்" என மும்பை அணி வீரர் டுமினி நம்பிக்கைத் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் சாம்பியன்ஸ் லீக் 'ருவென்ரி-20' கிரிக்கெட் தொடர் செப்டெம்பர் 10-26 ஆம் திகதிகளில் நடக்கிறது. இதில் இந்தியா சார்பில் சென்னை சுப்பகிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிகள் பங்கேற்கின்றன.

இத்தொடர் குறித்து மும்பை அணி வீரர் டுமினி கூறியதாவது;

சமீபத்தில் நடந்த மூன்றாவது ஐ.பி.எல். தொடரில் கப்டன் சச்சின் அணியைச் சிறப்பாக வழிநடத்தினார். இதேபோல அடுத்த மாதம் நடக்கவுள்ள சாம்பியன்ஸ் லீக் 'ருவென்ரி-20" தொடரிலும் திறமையை வெளிப்படுத்துவார் என நம்புகிறேன். தற்போது இவர் துடுப்பாட்டத்தில் நல்ல 'போர்மில்" இருப்பதால் சாம்பியன்ஸ் லீக் தொடரில் சாதிக்க அதிக வாய்ப்புள்ளது. ஐ.பி.எல். தொடர் மூலம் இவருடன் இணைந்து விளையாட நல்ல வாய்ப்புக் கிடைத்தது. அப்போது இவர் நிறைய 'ரிப்ஸ்" வழங்கினார்.

கடந்த முறை சாம்பியன்ஸ் லீக் தொடருக்கு மும்பை அணி தகுதி பெறாததால் கேப் கோபராஸ் அணிக்காக விளையாடினேன். இம்முறை மும்பை அணிக்கு விளையாடுவதை கௌரவமாகக் கருதுகிறேன். இம்முறை தென்னாபிரிக்காவில் சாம்பியன்ஸ் லீக் தொடர் நடக்கவிருப்பதால் தென்னாபிரிக்கா சார்பில் களமிறங்கும் அணிக்கு அதிகவாய்ப்புள்ளது.

ஏனெனில் அவர்கள் சொந்த மண்ணில்

போதுமான பயிற்சியெடுத்துக் கொள்வார்கள். இருப்பினும் 'ருவென்ரி-20' போட்டிகளில் எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்பதால் எந்த அணி வெல்லுமென்பதை தற்போது கணிக்க முடியாது.

ஐ.பி.எல். அணிகளில் நான்கு வெளிநாட்டு வீரர்கள் மட்டும் விளையாடவிருப்பது சற்றுப் பின்னடைவான விடயம். எங்கள் மும்பை அணியில் சச்சின் போலார்ட், சகிர், ஹர்பஜன் என அனுபவ வீரர்கள் நிறையவிருப்பதால் வெற்றி வாய்ப்பு அதிகமுள்ளது. ஒவ்வொரு அணியும் உள்ளூர் சாம்பியன்கள் என்பதால் ஒவ்வொரு போட்டியும் சவால் நிறைந்ததாக இருக்குமென எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.



# பந்துவீச்சு பயிற்சியாளராகிறார் குளூஸ்னர்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் புதிய பந்து வீச்சு பயிற்சியாளராக தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் லான்ஸ் குளூஸ்னர் நியமிக்கப்பட்டுள்ளார்.

2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் இணைந்து நடத்துகின்றன. இந்நிலையில் அணியின் பந்துவீச்சு தரத்தை மேம்படுத்தும் நோக்கில் பயிற்சியாளராக குளூஸ்னர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து முன்னாள் 'பேஸ் போல்' அணி வீரர் ஜூலியன் பென்டைன் அணியின் களத்தடுப்பு பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். சர்வதேச கிரிக்கெட் அணிக்கு முதல் முறையாகப் பயிற்சியாளர் பொறுப்பை ஏற்கிறார் குளூஸ்னர். இதற்காக அவர் மூன்று நிலைகள் கொண்ட சிறப்புப் பயிற்சியையும் முடித்துள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பரில் தொடங்கவுள்ள நியூஸிலாந்து அணிக்கு எதிரான தொடருக்கு முன்பாக குளூஸ்னர் பயிற்சியாளராகப் பொறுப்பேற்பார் என பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் செய்தித் தொடர்பாளர் ரபீத் இமாம் தெரிவித்தார்.




# ரோயல் சலஞ்சர்ஸ் வழங்கும் அதிக இழப்பீட்டுத் தொகை



தென்னாபிரிக்காவில் நடைபெறும் இருபது ஓவர் சாம்பியன் லீக் சர்வதேச கிரிக்கெட் தொடரில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிக்கே விளையாட அவுஸ்திரேலியாவின் விக்டோரியா அணி வீரர் கமரூன் வைட் முடிவு செய்துள்ளார்.

சாம்பியன் லீக்கில் விக்டோரியா புஷ்ரேஞ்சர்ஸ் அணியும் இடம் பெற்றிருப்பதால் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி வைட்டை தங்கள் அணிக்கு விளையாட வைக்க விக்டோரியா அணிக்கு இரண்டு இலட்சம் அமெரிக்க டொலர்களை இழப்பீடாக வழங்கவுள்ளது.

விக்டோரியா அணிக்கு டேவிட் ஹஸி தலைமையேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல் தென்னாபிரிக்காவின் வாரியர்ஸ் அணி வீரர் ஜக்கலிஸ், நியூஸிலாந்தின் சென்ட்ரல் ஸ்டாக்ஸ் வீரர் ரோஸ் டெய்லர் ஆகியோரும் ரோயல் சலஞ்சர்ஸ் அணியையே சாம்பியன் ல்க் கிரிக்கெட்டில் பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

இதற்காகவும் சம்பந்தப்பட்ட அணிகளுக்கு ரோயல் சலஞ்சர்ஸ் அணி இழப்பீட்டுத் தொகையை வழங்கவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் செலவில்லாத நகரங்கள்

பொதுவாக உலகின் பணக்கார நகரங்கள், செலவு மிக்க வாழ்க்கை முறை கொண்ட நகரங்கள் என்றெல்லாம் பட்டியல் போட்டால் அவற்றில் முதலிடம் பிடிப்பவை ஐரோப்பிய நகரங்களாகவே இருக்கும்.

ஆனால், செலவில்லாத சிக்கனமான நகரங்கள் என்று பார்த்தால் லத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க மற்றும் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தவை மட்டுமே பட்டியலில் இடம்பெறும். ஒரு ஐரோப்பிய நகரம் கூட இந்தப் பட்டியலில் வராது.

இந்த முறையும் உலகின் டொப் 10 செலவு குறைந்த அல்லது சிக்கனமான வாழ்க்கை முறை கொண்ட நகரங்கள் என்ற பட்டியலைத் தயாரித்துள்ளது மெர்சர்கொஸ்ட் ஒப் லிவிங் சர்வே என்ற அமைப்பு. மார்ச் மாத சர்வதேச நாணய மாற்று மதிப்பு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஆய்வு இது.

இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒரேயொரு இந்திய நகரம் கொல்கத்தா. இனி உலகின் டொப் 10 சிக்கனமான நகரங்கள் பட்டியல்:

## 1. கராச்சி



பாகிஸ்தானின் வர்த்தகத் தலைநகர் இது. 12 மில்லியன் மக்கள் தொகை கொண்ட பெருநகரமான கராச்சிதான் பாகிஸ்தானின் வருவாயில் பெரும் பகுதியைத் தருகிறது. இந்த நகரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மட்டும் 78 பில்லியன் டொலர்கள்.

ஆனால், மக்களின் வாழ்க்கை முறை இந்நகரில் வசிப்பதற்கான செலவு எல்லாமே எளிமையானவை என்கிறது ஆய்வு.

## 2. மனாகுவா



நிகராகுவாவின் தலைநகர் மனாகுவா. தொடர்ச்சியான அரசியல் புயலையும் இயற்கையின் சீற்றங்களையும் சந்தித்து வரும் நகரம். மக்கள் தொகை வெறும் 18 இலட்சம். உலகின் இரண்டாவது செலவில்லா நகரம் மனாகுவாதான் என்கிறது ஆய்வு. இத்தனைக்கும் வால்மார்ட், டெலிபோனியா, யூனியன் பெனோசா, பர்மாலட் போன்ற நிறுவனங்கள் இந்த நகரில் தங்கள் வர்த்தக சாம்ராஜ்யத்தை விஸ்தரித்துள்ளன.

## 3. இஸ்லாமாபாத்



பாகிஸ்தானின் 10 ஆவது பெரிய நகரம் இது. நிர்வாகத் தலைநகரும் கூட. 1.74 மில்லியன் மக்கள் தொகை கொண்ட இந்த அழகிய நகரம், சிக்கனமான வாழ்க்கை முறையில் 3 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

## 4. லா பாஸ்



கடல் மட்டத்திலிருந்து 12 ஆயிரம் அடி உயரத்தில் இருக்கும் லா பாஸ் பொலிவியா நாட்டின் தலைநகரும் 8.77 இலட்சம் மக்கள் வசிக்கும் இந்த நகரைவிட்டுச் செல்ல சுற்றுலாப் பயணிகளுக்கு அத்தனை சுலபத்தில் மனசு வருவதில்லையாம். அத்தனை சிக்கனமான நகரம். கொஞ்சம் விலையிலேயே ஸ்வெட்டர்கள், ஹேண்ட் பேக்குகள் எனப் பார்த்துப் பார்த்து வாங்க முடியும்.

## 5. அஷ்காபட்

துர்க்மெனிஸ்தானின் தலைநகரம் அஷ்காபெட். 6.95 இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். கொட்டன் மற்றும் உலோகத் தொழிலை அடிப்படையாகக் கொண்டது. மக்களின் வாழ்க்கை முறை மகா எளிமை. காலநிலையும் இருப்பிடச் செலவும் யாரையும் இங்கேயே இருந்துவிடத் தூண்டும்.



## 6. பிஷ்கெக்



கிர்கிஸ்தானின் தலைநகரமான பிஷ்கெக், முன்பு பிஷ்பெக் அல்லது ஃப்ரன்ஸ் என்று அழைக்கப்பட்டு வந்தது. 1.25 இலட்சம் மக்கள் மட்டுமே வசிக்கிறார்கள். விவசாயம்தான் அடிப்படை. மெர்சரின் செலவில்லாத நகரங்களில் 6 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

## 7. அடிஸ் அபாபா



எதியோப்பியத் தலைநகர் இது. 33 இலட்சம் மக்கள் வசிக்கும் இந்த நகரம் பரந்துபட்ட தொழில் அமைப்பைக் கொண்டது. வர்த்தகம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு, சுகாதாரம், சமூகநலம், ஹோட்டல், சேவைத் துறை, கால்நடை மற்றும் விவசாயம் என அனைத்துமே இந்த நகர மக்களின் வாழ்க்கை ஆதாரமாகவுள்ளது.

## 8. கொல்கத்தா



இந்தியாவின் முன்னாள் தலைநகரம், மேற்கு வங்க மாநிலத்தின் இந்நாள் தலைநகரம் கொல்கத்தா. ஒன்றரைக் கோடி மக்கள் வசிக்கும் பிரமாண்ட நகரம் இது.

கிழக்கு இந்தியாவின் வர்த்தக நிதி மையம் என்றுகூட கொல்கத்தாவை வர்ணிக்கிறார்கள். சிக்கனமான வாழ்க்கை முறை, உணவு, உடை என எல்லாமே குறைந்த விலையில் கிடைப்பதாக ஆய்வு சொல்கிறது.

## 9. டெகுசிகல்பா

ஹொண்டுராஸின் தலைநகரம் இந்த டெகுசிகல்பா. 1.25 இலட்சம் மக்கள் மட்டுமே வசிக்கிறார்கள்.



கடந்த 1998 ஆம் ஆண்டு வீசிய பெரும்புயல் இந்த நகரத்தையே முறித்துப் போட்டது. 5 நாட்கள் வீசிய இந்தப் பெரும் புயலில் டெகுசிகல்பா நகரின் ஒரு பகுதியே சிதைந்து போனது. அதிலிருந்து மெல்ல மெல்ல மீண்டு இப்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது இந்த நகரம்.

## 10. விண்தோயக்



நமீபியாவின் தலைநகரம் விண்தோயக். 2.33 இலட்சம் மக்கள் வசிக்கும் இந்த நகரம் தான் நமீபியாவின் முதுகெலும்பு. பெருந்தொழில் நிறுவனங்கள் இங்கே வர்த்தக மையங்களைக் கொண்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கற்றினா கைவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை தினக்குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, [illegible] ரோட், 68ஆம் இலக்கத்தில் 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.